SWATHANTRA SANGU Regd. No. M. 2811

சுதந்திரச்சங்கு

வாரப் பதிப்பு

தலையாட்டி மாடு

—படம்

சட்டசபை நீளுமா? சாகுமா?

ரோஜாவின் அவதாரம்

—கதை

பூனைக்கு மணி

—சிட்டி

கவூர்—இத்தாலிய வீரன்

கோட்டை வீடு

—வ. ரா.

ரூபாயின் ஆயுள் என்ன?

பழிக்குப் பழி

—ந. பிச்சமூர்த்தி.

புத்தகம் 4, சித்திரை மீ 15உ (27-4-34) வெள்ளி இதழ் 22.

"Swathanthara Sangu Press"

Invites enquiries of all classes of
General & Commercial Printing.

Printers of

"Harijan"

Conducted by Mahatma Gandhi

and

Published under the auspices of
The Servants of Untouchables' Society

Subscription for "Harijan"

Inland Rs. 4 Foreign Rs. 5-8.

8-c, PYCROFTS ROAD, TRIPLICANE, MADRAS.

சுதந்திரச்சங்கு

"சங்கு கொண்டே வெற்றி யூதுவோமே—இதைத்
தரணிக்கெல்லாமெடுத் தோதுவோமே"

போன் நெ. 8088

ஆசிரியர்: சங்கு. ஸுப்ரஹ்மணியன்.

Vol. IV.] சித்திரை௴ 15௳ வெள்ளிக்கிழமை (27—4—1934) [No. 22

சட்டசபை நீளுமா? தொலையுமா?

டெல்லி சட்டசபையைக் கலைப்பதா, இன்னும் ஒரு வருஷத்துக்கு நீட்டி வைப்பதா வென்ற விஷயத்தில் இந்திய வைஸ்ராய் வெல்லிங்டனுக்கும் இந்தியா மந்திரி ஸாமுயேல் ஹோருக்கும் அபிப்பிராய பேதங்களிருப்பதாகச் சில நாட்களுக்குமுன் தெரியவந்தது. புதிய தேருதல் நடந்து புது மனிதர்கள் சட்ட சபைக்கு வந்துவிட்டால் தமது அருமைத் திட்டமாகிய வெள்ளைக் கடுதாசித் திட்டம் கிழிக்கப்பட்டு விடுமோ வென ஸாமுயேல் ஹோர் நடுங்குவது உண்மையாகவே யிருக்கலாம். இப்போதுள்ள சட்டசபை ஆசாமிகள் 'ஜோஹுகும்' பேர்வழிகள் என்பதை ஹோர் நன்று யறிந்திருக்கின்றாராதலால் இந்த சந்தர்ப்பத்தை இழப்பதற்கு ஸாமுயேல் ஹோர் இணங்குவாரா?

இதுவரையில் இந்தியாவின் சரித்திரத்திலேயே இப்போது டெல்லிச் சட்டசபையி லிருப்பதைப் போன்ற குலாம் கூட்டத்தை நாம் கண்டதேயில்லை. சர்க்கார் என்ன சொன்னாலும் அதற்குத் தலையை யாட்டுவதா? இது சட்ட சபையா, பெருமாள் மாடா? பொது ஜன ஊழியத்தில் சிரத்தை துளியுமில்லாத பேர்வழிகளே இப்போது சட்ட சபையில் கின்னாரம் போடுகிறார்கள். மொத்தம் ஒரு குரோஸ்—அதாவது பன்னிரண்டு டஜன் ஆசாமிகளை அங்கத்தினர்களாகக் கொண்டது இந்திய சட்டசபை. ஆனால் அதில் நாற்பத்தைந்தே பேர்கள்தான் கூடி காரியத்தை நடத்திக்கொண்டு வந்திருக்கிறார்கள் எனின் பாக்கி நூறு ஆசாமிகளும் எந்தச் சத்திரத்தில் தூங்கிக்கொண்டிருக்கிறார்கள் என்று கேட்கவே வேண்டியிருக்கிறது.

தலையாட்டி மாடு

சமீபத்தில் 61 நாட்கள் நடந்த இந்த நீண்ட தர்பாரில் நிறைவேற்றப்பட்ட மசோதாக்களில் பெரும்பாலானவை தேசத் துரோகமானவை என்பதையும் சொல்லாமலிருப்பதற்கில்லை. பருத்தி பாதுகாப்பு மசோதாவென்று இந்தியாவின் கழுத்துக்கு ஒரு கத்தியை இந்த தர்பாரில்தான் நிறைவேற்றினார்கள். சமஸ்தானப் பாதுகாப்பு மசோதா என்ற கயிறும் இந்தத் தர்பாரில்தான் சுருக்கு முடியப்பட்டது. சர்க்கரை, தீப்பெட்டி முதலிய உபயோக வஸ்துக்கள்மீது வரிபோடுவதென்ற அநியாய முயற்சியையும் இந்தத் தர்பாரில்தான் கண்டோம். இத்தகைய தேசத்துரோக காரியங்களைத் தொடர்ந்தாற்போல நிறைவேற்றிக் கொண்டிருக்கும் ஓர் சபையை அடிமை இந்தியாவில் தான் நாம் சகித்துக்கொண்டிருக்கிறோம். வேறு எந்த நாட்டிலும் இந்தப் பாச்சா பலிக்காது.

இந்தக் கூட்டத்திற்கு ஆஜர்ப்படுத்தப்பட்டிருந்த நல்ல மசோதாக்களை ஏதேதோ சாக்குகளைக் கூறி ஒத்தி வைத்த குறும்பும் இந்தக் கூட்டத்திற்கே உரியது. திரு. எம். ஸி. ராஜா தீண்டாமைவிலக்கு மசோதா கொணர்ந்தால் அது ஊர்வலம் போய் வரவேண்டுமென்று சபை கூறிற்று. மண்ணெண்ணெய்க்கு வரி விதிக்கவேண்டுமென ஸ்ரீ மித்ரா கொண்டுவந்த தீர்மானத்தை வாபீஸ் வாங்கிக்கொள்ளுமாறு செய்துவிட்டார்கள். அவசரச் சட்டங்களை ஒழிக்குமாறு அமரநாத் தத்தர் கொண்டுவந்த தீர்மானம் தோற்கடிக்கப்பட்டது. இப்படி தோல்வியுற்ற தீர்மானங்களின் ஜாப்தாவைப் பார்த்தால் இந்தச் சட்டசபை இருந்தென்ன பயன் என்ற எண்ணமே ஏற்படுகின்றது.

கிடக்கட்டும், அங்கத்தினருக்கு அங்கத்தினர் மரியாதையாக நடந்துகொண்டார்களா என்றால் அதுவுமில்லை. கன்னா பின்னாவென்று ஒருவர் மீது ஒருவர் வசை புராணம் பாடுவதும், ரங்கய்யர் லஞ்சம் வாங்க முற்பட்டாரென்று பூரி என்பார் சொல்வதும், தம் கட்சித் தலைவர்களையே எதிர்த்து அங்கத்தினர்கள் வோட்டுக்கள் போடுவதும் இத்தகைய கட்டுப்பாடற்ற திறமையற்ற, அசங்கியமான காட்சிகளை இந்த சட்டசபைக் கூட்டத்தில் தான் கண்டோம்.

இந்த மட்டரகமான கூட்டத்தை இன்னும் ஒரு வருஷம் நீடித்து வைத்திருக்க வேண்டுமென சீமை மந்திரி எண்ணுகிறாராம்! என்ன வெட்கக்கேடு. டெல்லியில் குந்தியிருக்கும் கூட்டத்திற்கு மானம் வெட்கம் கொஞ்சமாவது இருக்கிறதா இல்லையா? பொதுஜனங்களிடம் பல்லைக் காட்டி வோட்டுப் பிச்சை யெடுத்து உள்ளே நுழைந்ததை இந்தப் பேர்வழிகள் மறந்துவிட்டார்கள் போலும்! இவர்கள் ஜனங்களின் பிரதிநிதிகளா அல்லது சர்க்காரின் கையிருப்பு வஸ்துக்களா? சர்க்கார் "இரு" என்றால் இருப்பதற்கும், "போ" என்றால் போவதற்கும் தயாராயிருக்கும் இதைப் பெருமாள் மாட்டுக் கூட்டம் என்று சொல்லாமல் வேறென்ன வென்று சொல்வது?

இந்தச் சட்டசபையின் ஆயுளை ஒருவேளை சர்க்கார் நீட்டி விட்டதாகச் சொன்னால் உடனே தங்கள் தங்கள் ஸ்தாபனங்களை ராஜீனாமா செய்துவிட்டு வீட்டுக்குத் திரும்ப வேண்டுவதே அங்கத்தினர்களுக்குக் கௌரவமாகும். அவ்வாறின்றி அட்டைகள் போல நாற்காலிகளோடு ஒட்டிக்கொண்டிருந்தால் அது அவர்களின் குள்ளப் புத்தியையும், துஷ்பிரயோகம் செய்ய அதிகார ஆசை கொண்டவர்களென்பதையும் உலகுக்கு பிரகடனப் படுத்துவதாகும். இந்த சட்டசபையை சர்க்கார் நீட்டுமா? கொலைக்குமா? நீட்டினால் அங்கத்தினர்கள் ராஜீனமா செய்வார்களா, மாட்டார்களா? பார்ப்போம்.

காங்கிரஸ் சபை கூடவேண்டும்

பாடலிபுத்திரத்தில் அடுத்தமாதம் 18, 19 தேதிகளில் அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி கூடப்போவதாக காரியதரிசி ஸையத் மகமத் தேசத்துக்கு அறிவித்திருக்கிறார். மேற்படி கூட்டத்திற்கு மகாத்மாஜியும் விஜயம் செய்வார். காங்கிரஸ் காரியக் கமிட்டியும் அன்றைக்குக் கூடும். தேசத்தில் இனி எத்தகைய வேலை செய்யவேண்டுமென்பதற்கு ஓர் திட்டம் போட்டுத் தரும் பொறுப்பு காரியக்கமிட்டியையும் சார்ந்தது. எந்தத் திட்டத்துக்கு காங்கிரஸ் ஆதரவு தருவதானாலும் அந்த திட்டங்களில் உழைப்பவர்களின் மீது பூர்ணமான அமுலை காங்கிரஸே வைத்துக் கொள்ள வேண்டும் என்பது நமதபிப்பிராயம். வழக்கம் போல நடக்கவேண்டிய காங்கிரஸ் மகாசபையின் பெருங் கூட்டம் இந்த வருடம் மார்ச் மாதத்தில் நடைபெறவில்லையாயினும் சீக்கிரத்தில் சந்தர்ப்பங்களை யனுசரித்து தாய்ச் சபையின் கூட்டத்தையே நடத்துவது உசிதமென அநேக தலைவர்கள் அபிப்பிராயப்படுகின்றார்கள். கராச்சி காங்கிரஸுக்குப் பின்பு பகிரங்கமாகக் காங்கிரஸ் வருஷாந்திரக் கூட்டம் நடைபெற முடியாதிருந்தது. இனிமேல் தேசத்தில் புதிய திட்டம் வேண்டுமாயின் காங்கிரஸ் மகாசபை கூடித் தீர்மானிப்பது தேசத்துக்குப் புத்துணர்ச்சி புகட்டுவதாகும். அலஹாபாத்திலும், காசியிலும் காங்கிரஸ் நாலணா அங்கத்தினர்களையும் சேர்க்க ஆரம்பித்துவிட்டார்களென்று செய்திகள் கிடைத்துள. ஆங்காங்கு காங்கிரஸ் கமிட்டிகளை ஏற்படுத்துவது உசிதமா வென்பது பற்றியும், 'ஸ்பெஷல் காங்கிரஸ்' ஒன்றைக் கூட்டுவதற்குச் சவுகர்யங்களுண்டா வென்பது பற்றியும் தேசபக்தர்கள் ஆலோசிக்குமாறு கேட்டுக் கொள்கிறோம்.

வைஸ்ராய் தர்பார்

புதிய அரசியலை அடுத்த வருஷத்தில் இந்தியாவில் நுழைக்கும்போது வைஸ்ராய் ஒரு ஏகாதிபத்திய தர்பார் கூட்டப்போகிறாரென ஓர் வதந்தி. 600 சிற்றரசர்களும் 50 லட்சம் பட்டாளக்காரர்களும் வைஸ்ராய் சிம்மாசனத்தின் முன்னே இந்த தர்பாரில் நிற்பார்களாம். இவ்வளவு தடபுடல்களிடையே பிரசவிக்கப்படும் அந்தப் புதிய 'அரசியல்', அடக்குமுறையின் ஆதாரவிலேயே நடக்கு மென்பதற்கு அந்தப் பட்டாள முஸ்தீப்பு அறிகுறி போலும்!

விற்காதே பெண்ணை!

சட்டசபையில் குன்வார் ரகுவீரசிங் என்பவர் 'பெண் விற்பனையை'த் தடுக்க ஓர் மசோதா கொண்டு வந்திருக்கிறார். வட நாடுகளில் சில ஜாதியினர் தங்கள் பெண்களை நல்ல விலை வந்தால் விற்று விடுவது சகஜமாயிருக்கிறது. இந்த வியாபாரத்திற்கு "கன்யா தட்சிணை" என்ற போலிப் பெயரையும் வைத்துக்கொண்டிருக்கிறார்கள்.

மெஜாரிட்டி அடையாத ஓர் பெண்ணை இந்த ரீதியில் விற்பவனுக்கு இரண்டு மாதம் சிறைத்தண்டனை— 200 ரூபா அபராதம் என்று அம் மசோதாவில் சொல்லப்பட்டிருக்கிறது. பதினாறு வயது வரை பெண்களுக்கு மெஜாரிட்டி வரவில்லை யென்றும் சொல்லப்பட் டிருக்கிறது. இந்த மசோதா சட்டமாக்கப்பட்டால் அதை ஒழுங்காகப் பிரயோகிக்க ஸ்தல அதிகாரிகள் சித்தமா யிருக்கிறார்களாவென்பது சந்தேகம் தான். சாரதாச் சட்ட விஷயத்தில் ஆங்காங்கு அதிகாரிகள் பாராமுகமாக இல்லையா?

பெண் விற்பனையைத் தடுக்க வடநாட்டில் சட்டம் தயாராகிறதே அதே மாதிரி தென்னாட்டில் பிள்ளை விற்பனையைத் தடுக்க ஓர் சட்டம் வரலாகாதா என்று சீர்திருத்தக்காரர்கள் நினைக்கிறார்கள்! வரதட்சிணை என்ற போலிப் பெயரின்கீழ் இங்கு காளை வியாபாரம் நடப்பது அரசியல் வாதிகள் கண்ணில் படவில்லையா?

நமது உலைக்கூடம்

ஏன் தடுக்கவேண்டும்?

பெத்தாபுரம் முனிஸிபாலிடி ஓர் முக்கியமான தீர்மானத்தை ஏகமனதாய் நிறைவேற்றிற்று பாபு ராஜேந்திரப் பிரசாதின் பூகம்பக் கஷ்ட நிவாரண நிதிக்கு 100 ரூபாய் அனுப்புவதென்பது முனிஸிபாலிட்டி செய்த தீர்மானம். இந்தத் தீர்மானத்தை நிறைவேற்றலாகாதென ஸ்தல ஸ்தாபன இனிஸ்பெக்டர் தடுத்து விட்டாராம். இது அநியாய மன்றோ! கஷ்ட நிவாரணத்துக்காகப் பணங் கொடுப்பவர்களைக் கையைப் பிடித்துத் தடுப்பதுதான் சர்க்காருக்கு அழகா? ராஜேந்திர பாபுவின் ஊழியர் கோஷ்டி இந்தக் கஷ்ட நிவாரண வேலையில் சர்க்காரோடு ஒத்துழைப்பதாக முடிவு செய்திருக்கும்போது அவருடைய நிதிக்கு உதவி கிடைப்பதை சர்க்கார் உத்தியோகஸ்தர்கள் தடை செய்வது பொருந்துமா? இதுதான் கஷ்ட நிவாரண வேலையில் சர்க்கார் ஒத்துழைக்கும் நேர்மையோ?

தொழிலாளர் கர்ஜனை!

சென்ற திங்கட்கிழமை முதல் பம்பாயில் பஞ்சாலைத் தொழிலாளிகள் வேலை நிறுத்தத்தைத் தொடங்கியிருக்கின்றனர். தொழிலாளிகளின் சம்பள விஷயத்திலுள்ள குறைகளைப் போக்கிக்கொள்ளவே இந்த வேலை நிறுத்தம் ஆரம்பிக்கப்பட்டதாம். இந்த வேலை நிறுத்தம் ஆரம்பித்த இரண்டு மூன்று தினங்களுக்குள் தலைவர்கள் அங்கு கைது செய்யப்பட்டிருக்கின்றனர். தற்காலத்தில் தொழிலாளர் இயக்கங்களைத் தலைமை வகித்து நடத்துவதற்குச் சரியான தலைவர்கள் இல்லாத காரணத்தால்தான் 'பொது வேலை நிறுத்தம்!' என்று இயக்கம் ஆரம்பித்திருந்தும் பம்பாயில் சில ஆலைகளில் வேலை நிறுத்தம் ஏற்படாதிருக்கிறது. முதலாளிகளுக்கும் தொழிலாளிகளுக்கும் அவ்வப்போது ஏற்படும் சச்சரவுகளைத் தீர்த்து வைக்க வேண்டியது சர்க்கார் கடமை. வேலை நிறுத்த காலத்தில் தொழிலாளர் பட்டினி கிடப்பதோடு, முதலாளிகளுக்கும் நஷ்டமேற்படுகிறது. தேசத்தின் உழைப்பும் வியர்த்தமாகிறது. இவைகளை ஆலோசித்து தலைவர்களை விடுவித்து தொழிலாளரின் குறைகளை நீக்க சர்க்கார் முற்படுமென்று நினைக்கிறோம்.

எல்லைப்புற 'காந்தி'க்கு

எல்லைப்புற காந்தி யெனப் பெயர் பெற்ற கான் அப்துல் கபூர்கான் இப்போது ஹஜரிபாக் சிறையில் இருந்து வருகிறார். அவர் உறவினருக்கும் நண்பருக்கும் எழுதி வந்த கடிதங்களைத் தணிக்கை செய்யும்போது ஜெயில் அதிகாரிகள் தங்கள் அதிகார அமுலை விசேஷமாகக் காட்டத் தொடங்கிய காரணத்தினால் தலைவர் கபூர்கான் தாம் இனி கடிதங்களை எழுதப் போவதில்லை யென முடிவு செய்துவிட்டாராம். கூண்டில் அடைபட்டுக் கிடக்கும் கைதி வேறென்ன செய்ய முடியும்? பட்டாணியர்களின் கண்ணுக்குக் கண்ணான ஓர் மாபெருந் தலைவனுக்கு இந்தச் சில்லரை விஷயத்தில் தொந்தரவு தருவதால் ஏகாதிபத்தியத்துக்கு என்ன பிரமாத லாபம் ஏற்பட்டுவிடப் போகிறது? பண்டித ஜவஹர்லாலுக்கு எழுதுவதற்குக் காகிதம் முதலிய வசதிகளும், விசிறிக் கொள்ள விசிறியும் தருவதற்கு அவர் தங்கியுள்ள சிறை யதிகாரிகள் இன்னமும் மறுத்து வருவதாக வேறொரு செய்தி கூறுகின்றது. "நரிக்கு நாட்டாண்மை தந்தால் கிடைக்கு இரண்டு ஆடு கேட்கும்" என்பார்கள்.

சிறையிலுள்ள சில்லறை உத்தியோகஸ்தர்கள் காட்டிவரும் இந்த அமுல்களை உடனே நிறுத்துவதற்கு இந்திய சர்க்கார் முற்படாவிட்டால் பழி இனி இந்திய சர்க்காரையும் சேரும். பொதுஜனத் தலைவர்களை இன்னமும் சிறையில் வைத்துக் கொண்டிருக்கும் குற்றம் ஓர் புறம் இருக்க அதிகார வெறி சர்க்காருக்குத் தீர்ந்தபாடில்லை யென்பதற்கு கபூர்கான் சம்பவமும் ஓர் உதாரணமாகும்.

டாக்டர் ரங்காச்சாரியார்!

இன்றைக்கு அவர் உயிரோடிருப்பாராயின் 52-வது வயது நிரம்புகிறது. ஆனால் அவர் மூன்று நாட்களுக்கு முன்னமேயே உலகை விட்டுப் போய் விட்டார். டாக்டர் ரங்காச்சாரியாரை இழந்தது தென்னாட்டுக்கே ஒரு நஷ்டம் என்று நிச்சயமாகச் சொல்லலாம்.

கோடம்பாக்கத்தில் ஹரிஜனங்களின் வசதிக்காக தர்ம வைத்தியசாலை யொன்று ஆரம்பித்தபோது அதை யாரைக் கொண்டு திறப்பு விழா நடத்துவது என்று ஆலோசித்தோம். அந்தப் புனித காரியத்தைச் செய்ய டாக்டர் ரங்காச்சாரியார் முன் வந்தார். ஏழை ஹரிஜனங்களின் முன்னேற்ற இயக்கத்தில் தாமும் நன்றாய்க் கலந்துகொண்டு உழைக்க வேண்டுமென்பது அவரது ஆசை.

ஆகாய விமானத்தில் பறந்துகொண்டும், ரோல்ஸ்ராய்ஸில் சுற்றிக்கொண்டுமிருந்த டாக்டர் ரங்காச்சாரியார் மேனாட்டு வைத்திய முறையில் கைதேர்ந்தவராயினும் உபவாசம், ஸ்நானம், பத்தியம் முதலிய இயற்கை வைத்திய முறைகளில் அதிகப் பிரியம் கொண்டவர். நோயாளிகளுக்கு இயற்கை முறையிலேயே சிகிச்சைகள் சொல்வதில் ஆர்வமுடையவர். ரங்காச்சாரியாருக்கு கதர் இயக்கத்திலும் சிரத்தை உண்டு. தமது ஆஸ்பத்திரிக்கும், வீட்டு உபயோகங்களுக்கும் வருஷா வருஷம் ஏராளமான தொகைக்கு அவர் கதர் வாங்குவதுண்டு. ஏழை மாணவர் பலருக்கு உபகாரச் சம்பளங்களும் அவர் தந்துகொண்டிருந்தார். டாக்டர் ரங்காச்சாரியாருக்கு பொது ஜன சேவையில் இருந்த ஆர்வமும், தேசபக்தியும் பகிரங்க படாடோபங்களல்ல. அந்தரங்கமானவை. ஆத்மார்த்தமானவை. அவரை இந்த சமயத்தில் இழந்தது தென்னாட்டுக்கு ஒரு நஷ்டமென்றே சொல்லலாம்.

அவருடைய பத்தினியாருக்கும் இதர உறவினர்களுக்கும் நம் காரியாலயத்தின் சார்பாகவும் கோடம்பாக்கம் கைத்தொழிற் கலாசாலை, கிராமசேவா சங்கம் இவைகளின் சார்பாகவும் நமது மனமார்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

ஐயா! என்ன உத்தேசம்?

“உமக்கு என்னதான் அந்தரங்க உத்தேசம்?” என்ற கேள்வியை அவரிடம் போடாமலிருக்க நம்மால் முடியவில்லை. சட்டசபைப் பிரவேசப் பிரசாரத்தில் ஈடுபட்டுள்ள ஓர் ‘காங்கிரஸ் தலைவர்’ சில தினங்களாகத் தென்னாட்டில் செய்துவரும் பிரசாரம் அவருக்கும், அவருடைய சட்டசபைப் பிரவேச சகோதரர்களுக்குமே இடையூறு செய்து கொள்வதாயிருந்து வருகிறது.

இந்தத் ‘தலைவர்’ கும்பகோணத்தில் ஒரு கேள்விக்குப் பதிலளித்தபோது, “சட்ட சபையில் ஆலயப் பிரவேச மசோதா வரக்கூடாது” என்று கூறினாராம். தீண்டாமை விலக்கு விஷயம் வெகு நாளாகக் காங்கிரஸ் திட்டங்களில் ஒன்று. சத்தியாக்கிரகம் மும்முரமாக நடந்து கொண்டிருந்த காலத்தில் கூட ஆலயப் பிரவேச மசோதா சட்டமாக்க வேண்டி சில பிரபல காங்கிரஸ் தலைவர்கள் அதற்காக உழைத்ததை நாமறிவோம். ஆகவே நாளையதினம் சட்டசபைகளில் காங்கிரஸின் அநுமதி பெற்றோ, ஆசி பெற்றோ அமரும் எந்தக் கட்சியாரும் காங்கிரஸ் திட்டங்களுக்கு அநுகூலமான மசோதாக்களுக்கு ஆதரவு தந்தே தீரவேண்டும். “இந்த மசோதாவில் மட்டும் எனக்கு அபிப்பிராயபேதம்” என்று கூறி காங்கிரஸ் கட்டுப்பாட்டில் துளி பொத்தல் போடுவதற்கு யாராவது முயன்றால் அவர் காங்கிரஸுக்கே இடையூறு செய்கிறாரென்றே கண்டிக்க நேரிடும். நிற்க,

நாம் குறிப்பிட்ட அந்தத் ‘தலைவர்’ வடக்கே பர்ஹாம்பூரில் ஒரு பொதுக் கூட்டத்தில் பேசியபோது “சட்டசபைகளினின்று வெளியே வந்துவிட வேண்டுமென காங்கிரஸ் உத்தரவிட்ட போதிலும், சுயராஜ்யக் கட்சியினர் அந்த உத்தரவு பிரகாரம் நடப்பது அந்த சந்தர்ப்பங்களைப் பொருத்திருக்கிறது; சட்டசபைகளை பகிஷ்கரிக்க வேண்டுமென்று காங்கிரஸ் உத்தரவிட்டாலும் சுயராஜ்யக் கட்சியால் ஒப்புக்கொள்ள முடியாது” என்று கூறினாராம். இது உண்மையாயிருப்பின் வளர்த்த கடா மார்பில் பாய்ந்த ரீதியாயிருக்கிறது என்றே கூறுவோம். காங்கிரசின் செல்வாக்கை மட்டும் உபயோகித்துக் கொள்பவன் யாராயினும் அவன் காங்கிரஸ் கட்டுப்பாட்டுக்கு உள்ளடங்கி நடக்காவிடில் அவன் ராஜீய வாழ்வை தூள் தூளாக உடைத்தெறிய காங்கிரஸ்காரர்கள் தயாராயிருக்கிறார்களென்பதை எச்சரிக்கின்றோம்.

சென்னை சதி வழக்கு முடிவு

வெகு காலமாக நடந்து வந்த ‘சென்னைச் சதி வழக்கு’ ஒரு வழியாக முடிவு பெற்றது. மூன்று பேருக்கு மட்டும் விடுதலை. பாக்கி 17 பேருக்கும் தண்டனை கொடுக்கப்பட்டு விட்டது. இந்த வழக்கின் நடவடிக்கைகளைக் கவனித்து வந்திருப்பவருக்கு ஒன்று புலனாகும்; இந்த ‘சதிக்’ கூட்டத்தை ஆரம்பித்தவர்களென்றும், ‘சதி’க் கோஷ்டியின் தலைவர்களென்றும் சொல்லிக் கொண்டவர்களுக்கு எந்தத் தண்டனையும் தரப்படவில்லை. ஆனால் மேற்படி ‘சதிக்கோஷ்டி’க்கு உடந்தையாக தூரத்திலோ அருகிலோ நின்றவர்களுக்குக் கூடத் தண்டனை கொடுக்கப்பட்டு விட்டது. இது அரசாங்கத்தின் கௌரவத்தை அதிகப்படுத்தும் என்று கருதுவதற்கில்லை.

இந்த வழக்கு நடைபெறும்போது நீதிபதி வால்ஷ் நடந்து கொண்ட முறை போற்றத்தக்கதுதான். வழக்கை விவரித்து அவர் ஜூரிகளிடம் கூறியபோது கைதிகள் சார்பாக அநுதாப மனத்தோடே தீர்ப்புக் கூற வேண்டுமென எடுத்துக் கூறினார். ஆனால் ஜூரிகளோ மூவரைத் தவிர பாக்கி எல்லாக் கைதிகளும் குற்றவாளிகளே எனக் கூறிவிட்டனர். அதன் பயனாகத் தண்டனை தர நேரிட்டது.

இந்த வழக்கு சம்பந்தமாக ஒரு விஷயத்தை நம்மால் குறிப்பிடாதிருக்க முடியவில்லை. தண்டனையடைந்தவர்களில் பெரும்பாலான இளைஞர்கள் காங்கிரஸ் இயக்கத்தில் உழைத்தவர்கள். இப்படி ஒரு ‘சதி’ வழக்கில் அவர்கள் சிக்கிக்கொள்ளுமாறு நேரிட்டது தேசத்தின் துர்ப்பாக்கியமே. ஆகவே இனி ஸ்ரீயுத ராஜகோபாலாச்சாரியார் போன்ற காங்கிரஸ் தலைவர்கள், தொண்டர்கள் தவறான மார்க்கங்களில் போகாதவாறு அவ்வப்போது மேற்பார்வையிட்டுக் கொண்டிருக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கின்றோம்.

தண்டனை விவரம்

முகுந்தலால் சக்காருக்கு 4 வருடம்.

கண்ணாயிரம், ஜோஸப், கண்ணன், லோகநாதன், பலராமரெட்டி, காளைய செட்டி, நாராயண நம்பியார், ரங்கராஜன், ராமானந்த சௌத்ரி, பாபி ராஜு இவர்களுக்கு 3 வருடம் சிறை.

அருணாசலம், கோபால சாஸ்திரி, பாலகிருஷ்ண ரெட்டி, தசரத ராம ரெட்டி, சுப்ரமணியம்—2 வருடம்.

ஜகந்நாதத்துக்கு ஒரு வருடம்.

சபாபதி, பாலு ரெட்டி, ஆதிசேஷய்யா இம்மூவரும் விடுதலையடைந்தனர்.

ஸைமன் ‘ஞெஞ்ஞே மிஞ்ஞே’

ஸர் ஜான் ஸைமன் பார்லிமெண்டு அங்கத்தினர்களின் கேள்விகளுக்கு பதில் சொல்ல முடியாமல் தவித்துக் கொண்டிருக்கிறாராம். அந்நிய அரசாங்கங்களோடு பிரிட்டிஷ் சாம்ராஜ்யம் எத்தகைய சம்பந்தங்கள் வைத்துக் கொள்ள வேண்டுமென்பதைக் கவனித்துக்கொள்ளும் உத்தியோகத்தை ஸர் ஜான் ஸைமன் வகித்து வருகிறார். இப்போது உலகில் கிழக்குப் பிரதேசத்தில் ஏற்பட்டுள்ள ஓர் நிலைமை எல்லோரையும் திகைப்புறச் செய்திருக்கிறது.

சில நாட்களுக்கு முன்னே ஜப்பானிய மந்திரி யொருவர் உலகத்தின் வல்லரசுகளின் உள்ளத்தில் தைக்கும்படி ஓர் பிரசங்கம் செய்தார். “இனி வேறு எந்த அரசும் சீனா விஷயத்தில் நுழையக்கூடாதென்று ஜப்பான் எச்சரிக்கை செய்கிறது” என்பது அவரது பேச்சின் சாரம். சீனாவின் ராஜீய விஷயங்களிலும் மேனாட்டு அரசுகள் தங்கள் வால்களை அவ்வப்போது நுழைத்துக் கொண்டிருக்கின்றன. அந்த வால்களை ஒட்ட அறுத்துவிடுவதற்கு ஜப்பான் துணிந்திருப்பது போலத் தோன்றுகிறது.

இப்போது சீனா விஷயத்தில் பிரிட்டிஷார் இனி எந்த விதமான கொள்கையை அநுசரிக்கப் போகிறார்கள் என்பதே கேள்வி. ஸைமன் இதற்கு ஏதேதோ விதமான பதில்களைக் கூறியதோடு, “சீனாவுக்குப் பிரிட்டிஷார் பணவுதவி செய்யலாமா செய்யக்கூடாதா என்ற விஷயத்தை அறிய ஜப்பானிய சர்க்காருக்குக் கடிதம் விடுத்திருக்கிறேன்” என்று கூறினார். ஜப்பான் என்ன பதில் தருமோ? ஆனால் ஏழைச் சீனாவின் மீது பிரிட்டிஷார் இவ்வளவு பரிதாபம் கொண்டு பண உதவி செய்யத் துணிவானேன் என்று நமக்கு விளங்கவில்லை.

ரோஜாவின் அவதாரம்

ஒரு சிறு கதை

(சங்கு. ஸுப்ரஹ்மணியன் எழுதியது)

[இயற்கையைச் சுற்றிக் கற்பனைக் கதைகள் ஜோடிப்பதில் ஆரியருக்கும், கிரேக்கருக்கும் ஆசை யதிகமிருந்தது. ஒளி, எதிரொலி, வான வில், நட்சத்திரம் முதலிய இயற்கை விஷயங்களைச் சித்தரித்து எவ்வளவோ கதைகளை சிருஷ்டித்தனர். நம்மைச் சுற்றிலு முள்ளவைகளை மறந்து கதையோடேயே கருத்தைச் செலுத்த அறிஞருக்கு அக்கதைகள் பெரு விருந்தாக உள. தமிழ் மொழியில் சிறு கதை யுலகில் அத்தகைய கதைகள் ஒன்றிரண்டைக் கையாண்டு செவ்வனே எழுதியவர் வ. வே. சு. ஐயர். அவருடைய "எதிரொலியாள்" என்ற கதையின் ரீதியைத் தழுவி இங்கு வேறொரு கதை ஜோடிக்கப்பட்டுளது.]

அந்த நிலவின் அவாங்மயமான ஒளியில், பிரகிருதி தேவியின் இன்ப வெள்ளத்தில், ஸ்ரீ தியானு தேவியின் எதிரே ரோஷந்தா நின்றிருந்தாள். வீரருக்கும், கலைஞருக்கும் தென்படாத அந்தத் தேவதை இந்தச் சிறுமிக்குக் காட்சி தந்தது வியப்பினும் வியப்பே. ஆனால் உயிரினும் மேலதான பக்தியை அர்ப்பணம் செய்த ரோஷந்தாவின் முன் தியானுத் தேவி தரிசனம் தராது இருப்பாளா?

அந்த வெண்ணிலவில் வெண்கல்லில் ஆக்கப்பட்டிருந்த தியானுவின் சிலை தன் உதடுகளை அசைத்தது. விந்தை! வீணையினும் இனிய குரலில் பேசவும் ஆரம்பித்தது.

"கண்மணி! ரோஷந்தா! என்னை ப்ரேமை யெனும் பாசத்தால் பிணித்துவிட்டாய். உனக்கு என்ன ருவது என்று எனக்கே விளங்க ல்லை. உனக்கு என்னதான் வேண் ம்? அச்சமின்றிக் கூறு" என்று ந்தக் கன்னித் தெய்வம் கேட்டது.

சிறுமிக்கு வியப்பு உணர்ச்சி அடங்கிச் சிந்தனை அலைகள் சேர ஆரம்பித்தன. அன்னையின் வெண் பாதங்களில் வெண்தாமரை மலரொன்றை யிட்ட பின்பு அச்சிறுமி, அருளொழுகும் அக்கண்களை அண்ணாந்து நோக்கினாள்.

"அம்மா! உலகை மோஹிக்கச் செய்வது எது?" என்று கேட்டாள். அன்னை முகமலர்ச்சியோடு ஒரே வார்த்தையில் விடை யளித்தாள்.

"அழகு"

"அம்மா எனக்கு அதைத் தருவையா?" என்று சிறுமி தட்டுத் தடுமாறிக்கொண்டே கேட்டாள். அந்த வெண்ணிலவில் அந்த வெண்விம்பம் பல் வரிசையைச் சிறிது காட்டிப் புன்னகை புரிந்தது.

"அசடே! அழகா வேண்டும்! உலகை மோஹனம் செய்யவா வேண்டும். தந்தேன்" என்று கூறியது தேவதை. பிறகு அந்தக் குரலைக் காணோம். வெறும் கல்தான் எதிரே நின்றது.

இந்தக் கோரிக்கையை அடைந்த பின்னர் ரோஷந்தா தன் தகப்பன் வசிக்கும் ஊருக்குத் திரும்பிவிட்டாள்.

ரோஷந்தையின் தந்தை அந்த ஊர்ச் சிறையில் கொலையாளி யுத்யோகம் பார்த்துவந்தான். உயிரை உடலினின்று பிரிப்பது பழத்தைத் தோலினின்று விலக்குவதுபோன்ற சாதாரணச் செய்கையென அவன் நினைத்திருந்தான். செய்கைக்கும் எண்ணங்களுக்கும் தகுந்தவாறே மனிதனின் உருவம் மாறுவது வழக்கமென்பார்கள். ஆதலால் அந்தக் கொலையாளியின் கட்டமைந்த தேகம் நாளுக்கு நாள் மாறுதலடைந்து உலகத்தி லுலாவும் பூதம் போன்ற உருவத்தை அடைந்துவிட்டது. தெருவில் அவனுடைய உருவத்தைக் குழந்தைகள் கண்டால் அவை உடனே பிரமிப்படைந்து செத்துப்போய்விடுமாம்! இத்தகைய சாவு தேசத்தில் மிகுந்துவிடவே அவன் நகரத்தில் இனி உலாவக்கூடாதென இராஜாக்கினை பிறந்திருந்தது.

* * *

குடிசையின் கதவை அவன் திறந்ததுதான் தாமதம். "ஐயோ மோஹினி! பிசாசு!" என்று அலறிக்கொண்டு கீழே விழுந்தான். அது மோஹினியுமல்ல! பிசாசுமல்ல! அவனுடைய செல்லக் குமாரி, தேவதையின் அருள் பெற்று அழகு வடிவுபெற்று வந்திருக்கிறாளென்பது அவனுக்கு எவ்வாறு தெரியும்? கொஞ்ச நேரத்துக்கு முன்னே அவளைப் பெற்றெடுத்தவளுக்கும் குமாரியின் அடையாளம் தெரியவில்லை என்றால் அதில் அதிசய மொன்றுமில்லை. ஏனெனில் ரோஷா அவ்வளவு மாறுதலடைந்திருந்தாள்.

கொலையாளிக்கும் அவன் மனைவிக்கும் இந்த உலகத்தின் நினைவுகள் ஏற்பட்ட பின்னர் ரோஷாந்தா தன் சரிதத்தை முற்றிலும் கூறினாள். நாழியாக ஆக கொலையாளிக்கு விதம் விதமான யோசனைகள் உண்டாயின.

தன் பெண்ணின் அருகே வந்து அசங்கியமான கைகளால் அந்தத் தூய மெல்லிய மேனியைத் தடவி "சரி! ரோஷா! உனக்கு இனிமேல் கல்யாணம் பண்ணனும், நம்ப ராசா மவன் உன்னைப் பார்த்தாக்கா கடிச்சுத் தூண்ணுப்புடுவான்!" என்று அடுக்க ஆரம்பித்தான்.

பெற்றவர்களின் காட்டு மிருண்டித்தனமான அந்த வார்த்தைகளும்

நடத்தைகளும் ரோஷாங்கதைக்கு வியாகூலத்தை விளைவித்தன. 'அம்மா! இப்போது எனக்குப் பசிக்கிறது சோறு போடு. அப்புறம் பேசலாம்' என்றாள். ரோஷா அந்த எளிய உணவை வேறு கதியின்றி சாப்பிட்டுக் கொண்டிருக்கும்போது மறுபடியும் கல்யாணப் பேச்சு நுழைந்துவிட்டது. ரோஷா சிறிது கடுகடுப்புடன், "அம்மா எனக்கு அழகு வரம் தந்த தேவதை கல்யாணம் பண்ணிக்கொள்ளலாகாது என்று கட்டளை யிட்டிருக்கிறதே!" என்று கூறினாள்.

"கண்ணாலம் பண்ணிக்காத சீவன் ஒரு சீவனா" என்று கொலையாளி ஹூம் போட்டுக்கொண்டே ஏதேதோ கூறினான். இப்படியாக அன்று இரவு கழிந்தது.

கொலையாளியின் வீட்டில் தேவகன்னிகையினும் அழகு மிகுந்த ஒரு வனிதையிருந்தசெய்தி காக்கைத் தபாலில் தேசமெங்கும் பரவி விட்டது. மரம் பழுத்தால் வௌவாலை வாவென்றழைப்பது உண்டா? அதேபோல் நல்ல ரூபவதிகளைப் பார்ப்பதற்கு இளைஞர்களை வெற்றிலை பாக்கு வைத்து அழைக்கவேண்டா மன்றோ! மறுநாள் மாலை இந்த விச்வ மோஹினியைப் பார்ப்பதற்கு ஊரினின்றும் திரளான ஜனங்கள் கூடிவிட்டனர். அரசகுமாரனும் வந்திருந்தான். ரோஷாவுக்கு வெளியில் வருவதற்கே வெட்கமாயிருந்தது. ஆனமட்டும் அப்பனும் ஆயாளும் அரசகுமாரனை மணந்துகொள்ள அவளை மன்றாடினர். ஒன்றும் பலிக்காது போகவே கோபமடைந்து அவளை வீட்டைவிட்டு வெளியே தள்ளி விட்டனர். அவ்வளவுதான். தடியர்கள் நான் முந்தி நீ முந்தி என்று தள்ளிக்கொண்டு அவளைத் தொடர ஆரம்பித்தனர்.

அரச குமாரனிடம், தான் தியான தேவியின் அருட் குமாரி யென்றும் கன்னிகையாகக் காலம் கழிக்கவேண்டுமென்றும் தன்னைக் காலாடிகள் கூட்டத்தினின்று காப்பாற்ற வேண்டுமென்றும் ரோஷா கேட்டுக் கொண்டாள். ஆனால் அரசகுமாரன்தான் அந்த காலாடிகளுள் முதல் தாம்பூலம் பெறுவதற்கு அருகதை யானவனாக இருந்தானெனில் அவள் என்ன செய்வாள் பாவம்!

அழகில் அவளுக்கு தெவுட்டிவிட்டது வெறுப்புத் தட்டிவிட்டது, என்றும் சொல்லலாம். தாய் தந்தையராலும், அரசனாலும் குடிபடைகளாலும் எல்லோராலும் 'தொந்தரவு' ஏற்படவே தெய்வமே கதியென்று ரோஷா ஓடினாள்.

சந்திரன் எழும் தருவாயில் அவனது தண்ணொளியையும் வெட்கச் செய்யும் மேனியுடைய இந்த அழகி அந்த வனத்தினூடே கோயிலை நோக்கிச் சென்று கொண்டிருந்தாள். பட்டதும் படாததுமாக பாதங்கள் நடந்தன. பொன்னும் வெள்ளியும் அவளது தெய்வீக ஒளியுடைய மேனியை மறைக்கவில்லை. உலகச் சம்பிரதாயமாக தூய மெல்லிய சிறு சிவப்பு ஆடையொன்று மட்டும் அவள் உடல் மீதிருந்தது. பரந்து தொங்கி பாதத்தை யெட்டும் கூந்தல் பின்புறத்தில் வழிந்து தொங்குவது அவளது மேனிக்கு பகைப்புலனாக வாய்த்து, இன்னும் பகட்டாக எடுத்துக் காட்டிற்று. அழகின் வரம்பு ரோஷாங்கதையின் உருவம்தான் என்று தேவதைகளும் நினைத்தார்களாம்.

* * *

உலகம் உண்டானதி லிருந்து மனிதன் அழகை வணங்கி வாழ்ந்ததில்லை. அழகான பொருள் எதைப் பார்த்த போதும் உடனே சொந்தமாகிக் கொள்ளவேண்டும் என்ற உணர்ச்சிதான் அவனுக்கு ஏற்படுகின்றது. அழகான நாட்டைக் கண்டால் அதை வென்று ஆளவேண்டுமென்ற உணர்ச்சியை நாம் நிதரிசனமாகப் பார்க்கவில்லையா? ஆனால் அடைந்த பிறகு அந்த அழகுப் பொருளைக் காப்பாற்றுவதில் அக்கரை நாளுக்கு நாள் குறைவுபடுவதையும் காண்கின்றோம். இதுதான் மனித ஜாதிக்கும் அழகுக்குமுள்ள சரியான சம்பந்தமோ? எவ்வளவோ ருஸ்கின்களும் தாங்தேக்களும், பாஸர்களும் தோன்றினாலும் மனிதன் அப்படியே தான் இருக்கிறான். அதையறிந்துதான் தியான தேவி, ரோஷா விவாகம் செய்து கொள்ளலாகாது என்று கட்டளை யிட்டாள் போலும்.

வெட்கம்! ரோஷாவின் பின்னால் கணக்கில்லாத காலிகள் பின் தொடர்ந்து போன வண்ணமே யிருந்தனர். நான்கு பெண் பெற்றவரும், நரைத்தலைக் கிழங்களும், வீர இளைஞர்களும், வீண் பொழுது போக்குபவரும் அரசரின் குமாரரும், அருங்கவிதை பாடுபவரும் ஓவியரும் அவளைப் பின் தொடர்ந்து சென்ற காட்சி மனித ஜாதிக்கே வெட்கக் கேடாயிருந்தது.

கடைசியாக அந்த அழகி தியானத் தேவியின் சிலை யருகே ஓடோடியும் வந்தாள். காமியரும் கோயிலுக்குள் தொடர்ந்தனர். அங்கு மேடையின் பேரில் நின்றிருந்த அன்னையின் பாதங்களில் அற்ற மரமென விழ்ந்தாள் ரோஷங்தா. "அம்மாடி! எனக்கு அழகு வேண்டாமடி! கயவரிட மிருந்து என் கன்னித் தன்மையை நீதான் காப்பாற்ற வேண்டும்" என்று அவளது வாய் முணுமுணுத்தது.

கீழே கிடக்கும் ரோஷாங்கதையின் உடலை மனித ஓநாய்கள் சுற்றிக் கொண்டன. சிலர் தங்கள் கைகளால் தொடவும் துணிந்தனர். ஆனால் அந்தத் தேவதையின் சக்தி மீண்டும் சிலையுள் வந்து நின்றது. தேவியின் கைகள் கூட்டத்தை நோக்கி ஒரு தடவை அசைந்தன. அவ்வளவுதான் அடுத்த கணத்தில் தேவியின் பாதத்தினருகே இளஞ் சிவப்புடைய புஷ்பம் ஒன்று கிடந்தது. அந்தப் புஷ்பத்தின் காம்புகளில் சிறு சிறு முட்கள் நிறைந்திருந்தன.

அழகான இதழ்கள் தான் ரோஷா—முட்கள் தான் அந்தக் காமப் பித்தர்கள். அன்றைய தினத்திலிருந்து காமுகரான முட்களுடன் அழகி ரேசஷா ரோஜாப் பூவாக உலகில் இருந்து வருகின்றாள்.

மகாத்மா காந்தி எழுதியவை

		ரூ.	அ.	பை.
இல்லறமும் பிரும்மசரியமும்	....	0	6	0
மகா தியாகம்	....	0	4	0
அனுசக்தி யோகம்	....	0	4	0
ஹிந்து தர்மம்	....	0	2	0
கீதா போதனை	....	0	2	0
உத்தம வாழ்க்கை	....	0	2	0
ஆரோக்கிய வழி	....	0	4	0
நீதி தர்மம்	....	0	2	0
சத்திய சோதனை முதற் பாகம்	...	1	8	(
சத்திய சோதனை இரண்டாம் பாகம்	....	2	0	

சுதந்திரச்சங்கு புத்தகசாலை
பைக்கிராப்ட்ஸ் ரோட்,
திருவல்லிக்கேணி, செ



பாரதீய நாட்டியம்

(ஸ்ரீமான் லக்ஷ்மண சங்கரன் எழுதியது)

ஜீவ சைதன்யத்தின் பெருக்குக் காரணமாக ஆத்ம ஸங்கீத மானது கூத்தனது சரீரத்தின் எழில் வாய்ந்த சலனத்தின் மூலமாய் வெளிக் காட்டுவதே நாட்டியம். பாரதீய நாட்டியம் மிகவும் தொன்மை வாய்ந்தது. சுமார் கி. பி. நான்காவது நூற்றாண்டில் பரத சாஸ்திரமானது பரத ரிஷியால் மிகவும் விரிவாகத் தொகுக்கப் பட்டது. ஆயினும் இந்த பரத சாஸ்திரமே அதற்கு வெகு காலத்திற்கு முன்னர் இயற்றப் பட்ட நட சூத்திரங்களை ஆதாரமாகக் கொண்டுள்ள தென்றால் நாட்டிய சாஸ்திரத்தின் தொன்மை தெற்றென விளங்கும். பாரத சரித்திரத்தில் மிகவும் பண்டைக் காலத்திலேயே இவ்வரும் பெருங் கலையானது அதன் முப்பெருந் துறைகளாகிய நடனம், நாட்டியம், நிருத்தியம் என்ற மூன்றினுள்ளும் மிகவும் விரிவும் வளர்ச்சியு மடைந்திருந்தன. ஹிந்துக்கள் தங்கள் தேச சரித்திரத்தின் ஆரம்பத்திலேயே இந்தக் கலையின் நுணுக்கங்களைக் கரை கண்டு, அதை சாஸ்திரமாக வகுத்துத் தொகுத்து, நாட்டியமாகிய மஹா நதியின் உப நதிகளாகிய நடனம், நாட்டியம், நிருத்தியம் எனும் மூன்றையும் வரை யறுத்து, அவற்றின் ஸங்கமம் உலகத்துக் கெல்லாம் நடன நாயகனை நடராஜப் பெருமானது திருவடி நிழலிலேயே என்பதை நன்கு காட்டினர்.

புராதன நூல்களில்

இந்தக் கலையைப் பற்றி முதன் முதலாக ரிக் வேதத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. அதில் காலையின் அதி தேவதையாகிய உஷா தேவி ஓர் நடனமாதாக உவமிக்கப் பட்டு வெகு எழில் பொருந்திய ரிக்குகளால் வர்ணிக்கப் பட்டிருக்கிறாள். இன்னும் இதிஹாஸ புராணங்களிலும் இவ் வரும் பெரும் கலையினிடத்தும் அதனைப் பயில்வோரிடத்தும் எந்த விதமான நன்மதிப்பும், அபிமானமு மிருந்தது என்பது தெற்றென விளங்குகிறது. கந்தர்வ வேதத்தின் இந்த அங்கமாவது மஹா உன்னதமான நிலையிருந்து ஜன சமூகத்தின் வணக்கத்தை இறுத்துக் கொண்டு வந்தது என்று தெரிகிறது. வால்மீகி ராமாயணத்தில் பல இடங்களில் நடனத்தைப் பற்றியும் நடம் பயில்வோரைப் பற்றியும் சொல்லப் பட்டுளது. பால காண்டத்தில் பன்னிரண்டு யோஜனை நீளமும் மூன்று யோஜனை அகலமுமுள்ள அயோத்திமா நகரின் கண் அரசாண்ட தசரத சக்ரவர்த்தியின் ராஜ்யத்தின் ஜனபதத்தின் ஒரு முக்கிய பிரிவு "நாடக ஸங்கம்" என்று கூறப்பட்டுள்ளது. (பால காண்டம் 5, 12 ;) இது போலவே அங்க தேசத்திலும் இந்த நாடக ஸங்கம் ஜன ஸமூஹத்தின் முக்கிய பிரிவாக இருந்தது. இது பால காண்டத்தில் லோமபாதர், ரிஷியசிருங்கர் கதைகளினால் தெரிகிறது. தசரத மஹாராஜன் தான் செய்யும் அசுவமேத யாகத்திற்குக் கணகர்களையும், சிற்பிகளையும், நடனர்த்தகர்களையு மழைத்து அவர்கள் வந்தால் தன் சபைக்கொரு கௌரவம் என்றெண்ணுகிறான். (பால காண்டம் 9, 17; 10-5; 10-6) ராமருக்கு யுவ ராஜ பட்டாபிஷேகம் நடக்கும் விழாவைக் கண்டு களிக்கக் குழுமிய அறிஞர் குழாத்தில் இந்தப் பகுதியினர் முக்கியமானவர்கள். அயோத்தியா காண்டத்தில் அராஜ்யத்தின் கெடுதிகளைப் பற்றி வர்ணிக்கும்போது, ராஜ்யத்தின் பொது நன்மைக்கும் க்ஷேமத்துக்கும் இக்கூட்டத்தார் இன்றியமையாதவர்கள் என்று வால்மீகி கூறுகிறார். லங்கேஸ்வரனான இராவண மஹா ராஜன் இரவிற் படுக்கப்போகு முன் "ஸதிர்க் கச்சேரி" ஒன்று நடத்திப் பார்ப்பது வழக்கம். (சுந்தர காண்டம். 10-36 ; 10-41) பரதன் தன் தமையனாகிய ராமன் வனவாஸத்திற்குப் பிறகு, அயோத்திமா நகரில் பிரவேசிக்கும் சமயம் அவ்வமயத்தைக் கொண்டாடும் பொருட்டு ஒரு விழா ஏற்படுத்தி அதற்குக் கணிக சங்கத்தாரை அழைக்கிறான். (யுத்த காண்டம். 130-3) இன்னும் ராமபிரான் இரவு சயன க்ருஹத்துக்குப் போகுமுன் "நடனம் வல்ல நகைமுக மாதரசை" அழைத்து அவர்களது எழில் வாய்ந்த நடனத்தைப் பார்ப்பது வழக்கம் என்று தெரிகிறது. ஸ்ரீராமர் நைமிசாரண்யத்தின்கண் நடத்த எண்ணிய அசுவமேத யாகத்தில் அவருக்கு உதவி செய்யுமாறு பரதன் அயோத்தியிலிருந்து நடத்திச் சென்ற சேனையில் நடனர்த்தகர்களும் எழில் வாய்ந்த மங்கையரும் நடு நாயகங்களாக விளங்கினர். யாகம் நடந்து கொண்டிருக்கும் போது அரசன் லவ குசர்கள் ஆசியாவின் மஹத்தான ஆதி காவியமாகிய வால்மீகி ராமாயணத்தைப் பாடக் கேட்குமாறு கூட்டிய சபைக்கு அழைக்கப்பட்ட வித்வத் ஸமாஜத்தாரில் இந்நட னர்த்தகர்கள் முக்கியமாக விளங்கினர். (உத்தர காண்டம். 94-9.)

இன்னும் மஹா பாரதத்திலும், மஹா புராணங்களிலும், உப புராணங்களிலும், மஹாத்மியங்களிலும் நாடக, காவிய, அலங்கார சம்பு இவை சம்பந்தமான ஸாஹித்தியங்களிலும் இந்தக் கலையைப் பற்றியும் இக்கலை வல்லவர்களைப் பற்றியும் வர்ணனை செறிந்து கிடக்கிறது. இவற்றிலிருந்து நட நர்த்தர்கள் அரசனால் நன்கு மதிக்கப்பட்டு நகர வாழ்க்கையின் அங்கங்களான அஷ்ட ரத்நங்களில் ஒரு கோஷ்டி என்று தெரிகிறது.

சிற்ப அத்தாட்சி

நாட்டியம் இந்திய ஜாதீய சரித்திரத்தில் வெகு காலத்திற்கு முன்னதாகவே பரிபூரண மடைந்து விட்டது என்பதற்குச் சிற்பக் கலையிலும் பல அத்தாட்சிகள் கிடைத்திருக்கின்றன. சித்திரம், பாவை இவ்விரண்டு வழியிலும் நம் முன்னோர் தங்களுக்கு நடன சாஸ்திரத்திலிருந்த அபிமானத்தை வெளிக் காட்டியிருக்கின்றனர். மிகவும் பண்டைய காலத்தில் நடனத்தை அவலம்பித்துக் கொண்டிருக்கும் விக்ரஹங்கள் புத்த கயாவிலும், பார்ஹூத்திலும் காணப்படுகின்றன. இதைத் தவிர ஸஞ்சியில் வடக்குத் தோரணத்தின் மேற் பலகையில் மாதர்கள் நடனம் செய்வதைப் போலச் செதுக்கப்பட்டிருக்கிறது. கிருஷ்ணா நதிக்கரையில் அமாராவதியி லிருக்கும் ஸ்தூபத்தில் 1800 வருடங்களுக்கு முன் நடந்த நடனக் காட்சியொன்று செதுக்கப் பட்டிருக்கிறது. புத்தர் ஒரு மண்டபத்தில் சிங்காதனத்தில் வீற்றிருப்பது போலவும் அவருக்கு முன் மாரனின் புதல்விகள் அவரது தீர்க்க வைராக்கியத்தைத் தம் நடனத்தால் திருப்ப முயலுவது போலவும் செதுக்கப்பட்டிருக்கிறது.

இவற்றைத் தவிர நம் கோயில்களிலும் வீடுகளிலும் இருக்கும் நட நாயகனை நடராஜப் பெருமான், கண்ணபிரான், தேவி யிவர்களின் நடனக் கோலத்தைக் காட்டி நிற்கும் சித்திரங்களும் பாவைகளும் மனத்தைக் கவரும் அற்புத அழகும் பெருமையும் வாய்ந்தன. சிவபெருமானது சந்தியா நிருத்தியத்தையும், வெறியாட்டாகிய ஊர்த்வ தாண்டவத்தையும், ஆனந்தத் தாண்டவத்தையும் ஊழிக் காலத்தில் தேவியாரே சாட்சியாக வைத்துக்கொண்டு ஆடிய மஹா தாண்டவத்தையும் விளக்கும் விக்ரகங்களும் கணக்கில. கண்ணபிரான் கோபிகளுடன் கூடி யாடிய ராஸ லீலையின் ஆனந்தம் சித்திரத்தில் எழிலுறப் பொறிக்கப் பெற்றிருக்கின்றது. கண்ணபிரான் காளிங்கனது தலைமேல் நின்று கொண்டாடிய நிர்த்தனமும் மனதிற் பக்திரஸத்தைப் பெருக்குவது. தேவியினது வெறியாட்டுக் களிப்பாகிய மஹா காளியின் நடனத்தின் அழகை அறிஞரே அறிவர். இவ் விக்ரகங்களெல்லாம் நம் நாட்டுச் சிற்பத்தின் பண்டைப் பெருமைக்கு அழியாத அத்தாட்சி.

தமிழ் நூல்களில்

இன்னும் இவ்வரும் பெருங் கலையின் தமிழ்ப் பிரிவை ஆராய்ந்து நோக்கின் ஆரியப் பிரிவை விட இன்னும் மிகத் தொன்மை வாய்ந்ததெனத் தெரிகிறது. தமிழ்த்துறையில் நாட்டியம் தனக்கென்றே புதிதான மார்க்கம் ஏற்படுத்திக் கொண்டிருக்கிறது. நாட்டிய சம்பந்தமான வட நூல்களில் சொல்லப்படாததும் தமிழகத்துக்கே உரித்தானதுமான கூத்து வகைகள் சில தமிழ் நூல்களில் விவரிக்கப்பட்டிருக்கின்றன. சிலப்பதிகாரத்தில் அரங்கேற்று காதையிலும் கடலாடு காதையிலும் கிறிஸ்தவ சகாப்தத்தின் முன் நூற்றாண்டுகளில் வழக்கத்திலிருந்த சில கூத்து வகைகள் வர்ணிக்கப்பட்டிருக்கின்றன. சிலப்பதிகார உரை யாசிரியரான அடியார்க்கு நல்லார் இக் கூத்துகளைப் பற்றிய விவரங்களைத் தெளிவாகக் கூறியுள்ளார். தமிழ் நூலார் கூத்தின் குணத்தை அனுசரித்துச் சாந்திக் கூத்து, விநோதக் கூத்து என்று இரு பகுதியாகப் பிரித்தனர். இவற்றுள் சாந்திக் கூத்தில் கூத்தன் சாந்தியான மனோ நிலையில் ஆத்மாவின் உன்னதமான எழிலை அவயவங்களின் சலனங்கள் மூலமாய் வெளிக் காட்டுவது. விநோதக் கூத்து இவ்வளவு உயர்ந்த நோக்கத்தைக் கொள்ளாமல் பொழுது போக்காகவே ஏற்பட்டது. இக் கூத்து வகைகளில் குடைக் கூத்து, குடக் கூத்து, குரவைக் கூத்து எனும் மூவகைக் கூத்துக்களைப் பற்றியும் தமிழ் இலக்கியத்தில் குறிப்புகள் செறிந் திருக்கின்றன. சிலப் பதிகாரத்தில் ஆயர் பாடியில் நடந்த குரவைக் கூத்து வர்ணிக்கப்பட் டிருக்கிறது. குடம், குடை எனும் இவ்விரு வகைக் கூத்துக்களும் தமிழ் நாட்டுக்குத் தெய்வமாகிய செவ்வேளின் வெறியாட்டுக் களி.

குடையொடு துடி யிரண்டும்
குமரன் தாட லாமே

—சூடாமணி.

அறுமுகத்தோ னாடல் குடைதுடியாடல்
வேண் முருக னாடல்

— சிலப்பதிகாரம்.

கடலாடு காதையில் இக் கூத்துக்கள் பின் வருமாறு வர்ணிக்கப்பட்டுள்ளன.

படை வீழ்த்தவுணர் பையுளெய்தக்
குடை வீழ்த்தவர்மு னாடிய குடையும்
வாணன் பேரூர் மறுகிடை நடந்து
நீணில மளந்தோ னாடிய குடமும்

(52, 55.)

முருகக் கடவுள் கடலிலொளிர்த சூர பன்மாவைக் கொன்ற பின் அலையுடுத்த திரையரங்கத்தின்மீது தனது துடியின் நாதத்திற் கிசைய ஆடினர். இது கண்டு மற்ற அரக்கர்கள் தங்கள் படைகளை யெறிந்துவிட் டோடவே முருகக் கடவுள் தன் முகத்தைக் குடையால் மறைத்துக்கொண்டு குடைக் கூத்தாடினராம்.

மாக்கட னடுவண்
நீர்த்திரை யரங்கத்து நிகர்த்து
முன்னின்ற
சூர்த்திறங் கடந்தோ னாடிய துடியும்

(2. 49, 51, கடலாடு காதை)

சேடனுக் கசண்டா ளரக்கர் குல
மாளவிட்டுக் குண்டேழலைக் கடல்கள்
சேரவற்ற னின்றுடி விற்கரமீ ரறு
தோண் மேல்

—திருப்புகழ்

தமிழ்க் கூத்து நூல்களின் தொன்மையை நோக்கின் மிகவும் பண்டைக் காலத்திலேயே தமிழ் நாகரிகத்தில் இத்துறை அடைந்திருந்த விரிவும் பெருமையும் தெற்றென விளங்குகிறது.

—லோகோபகாரி.

Have your Majestic
FIGURE
A. R. DASEN STUDIO.
The Best
AND MOST UP TO DATE STYLES FINISH
ELECTRIC PHOTO ARTISTS
No. 55 RATTAN BAZAAR ROAD MADRAS
STUDIO HOURS 8 A.M to 8 PM

பூனைக்கு மணி

(சிட்டி எழுதியது)

இந்தப் பழங் கதைதான் எனக்குத் தெரியுமே என்று சொல்லிவிடாதீர்கள். பார்க்கப்போனால் உலகத்தில் எல்லாம் பழையதுதான்; உலகமே பழையது.

நிற்க, நான் இப்பொழுது ஏதோ பாட்டிக்கதை கூற முன்வரவில்லை. பூனைக்கு அவசியமாய் மணிகட்டவேண்டுமென்பதையே வற்புறுத்தப் போகிறேன். 'பூனை எங்கே?' என்று கேட்கக்கூடாது. இப்பொழுது கூறினால் இந்தப் பிரசங்கம் நீங்கள் கேட்க முடியாமல் போய்விடும்.

பேச்சுரிமையைப்பற்றி தீவிரமாகப் பேசப்படும் காலம் இது. எழுத்துரிமையும் வேண்டுமென்று சிலர் கருத்து. எழுத்துரிமை யென்றால் தமிழை சீன பாஷைபோல் எழுதும் முறையல்ல. உதாரணமாக என் எழுத்தை எடுத்துக் கொள்ளுங்கள். ஒரு தடவை என் எழுத்தைப் பார்த்துவிட்டால், அதை அச்சுக் கோப்பவர் பெரும் நிபுணர் என்ற முடிவுக்கு வந்துவிடுவீர்கள். பத்திராதிபரோ கொஞ்சத்தில் என் கட்டுரையைப் படிக்க முடியாது. முதலில் எழுதியது தமிழா அல்லது ஏழாயிரம் வருடங்களுக்கு முன் கற்களில் செதுக்கப்பட்டு இப்பொழுது மங்கிப் போன வேறு பாஷையா என்ற சந்தேகம் தோன்றிவிடும். படிக்காமல் கட்டுரையைத் திருப்பி யனுப்ப மனமில்லாத அதிபர்கள் அச்சுக் கோப்பவர் மேல் ஏதாவது கோபமிருந்தால் என் கட்டுரையைக் கோக்கும்படி கொடுத்து தண்டனை விதித்து விடுவார்கள். அச்சுக் கோப்பவர் என்னை எவ்வளவு தூரம் ஆசீர்வதிக்கிறாரோ அது அவருக்குத்தான் தெரியும்.

இந்த லட்சணத்தில் பத்திராதிபர்கள் மிகவும் அந்தஸ்துடன் தங்கள் பத்திரிகைகளில் 'கட்டுரையாளருக்கு' என்று ஒரு விளம்பரம் போட்டுவிடுகிறார்கள். அதில் நீங்கள் எந்தக் காகிதத்தில் எப்படி எழுதவேண்டுமென்று உபதேசம் செய்வதுண்டு. என்னடா கஷ்டப்பட்டு எழுதுகிறார்களே என்று வந்தனமளிக்காமல், பேனாவை எப்படிப் பிடித்துக்கொண்டு எழுதுவது என்ற விஷயம் வரையில் இவர்கள் நமக்கு புத்தி கூற முன்வருவதுதான் நமக்கு ஒவ்வொரு சமயத்தில் வருத்தமாயிருக்கிறது. ஆனால், பாவம், வேண்டுமென்றா அவர்கள் அம்மாதிரி செய்கிறார்கள்? என்மாதிரி ஒருவனுடைய கையெழுத்துப் பிரதியைப் பார்த்த பிறகுதான், இம்மாதிரி அவர்களுக்குக் கடும் எண்ணங்களெல்லாம் தோன்றுகின்றன. ஆகவே இதற்கெல்லாம் காரணமான நான்தானே கட்டுரையாளர்களின் குறைகளைத் தீர்க்கவேண்டும்?

சென்ற வாரம் நடந்த அகில இந்தியக் கட்டுரையாளர் மகாநாட்டு நடவடிக்கைகளைப்பற்றி தினசரிகளில் படித்தீர்களா? இல்லை. பிரசுரிக்காதது தினசரிகளின் குற்றமல்ல. மகாநாட்டின் காரியதரிசி நானாகையால் நடவடிக்கைகளை என் கையெழுத்தில் எழுதி தினசரிக்கு அனுப்பியிருந்தேன். ஏன் பிரசுரமாகவில்லை என்று உங்களுக்கு இப்பொழுது விளங்கியிருக்கும். அதோடு எந்த செய்தியையும் தவறாது பிரசுரிக்கும் நமது பிரபல தினசரி ஒன்று என் கையெழுத்துப் பிரதியை பிரிட்டிஷ் மியூசியத்தின் சிலாசாஸன, எட்டுப் பிரதி நிபுணரிடம் அனுப்பியிருக்கிறதாம்.

நிற்க, மகாநாட்டில் நிறைவேறிய தீர்மானங்களை இப்பொழுது கூறுகிறேன், கேளுங்கள்.

1. பத்திராதிபர்கள் கட்டுரைகளை தங்கள் குடும்பத்தில் அபிப்பிராய பேதம் ஏற்பட்ட காலத்தில் படிக்கக் கூடாது.

2. கட்டுரையின் தலைப்பில் 'நகைச் சுவைக் கட்டுரை' யென்று போட்டிருந்தால் அதிபர் சிரித்துக்கொண்டே படிக்கவேண்டும்.

3. கட்டுரை அழகான எழுத்துக்களில் எழுதப்பட்டிருந்தால் அவ்விஷயத்தை ஆசிரியர் குறிப்பால் கூறவேண்டும். (இது, கட்டுரை பிரசுரித்ததன் குற்றம் அதிபரைச் சேராமலிருப்பதற்கு வழி. இந்த தீர்மானத்தை பத்திராதிபர்களைக் காக்காய் பிடிக்கும் பொருட்டு நானே பிரேரேபித்து, அதனால் ஏற்பட்ட குழப்பத்தில் நிறைவேறியதாக எழுதிவிட்டேன். காரியதரிசி கூறுவதுதானே உண்மை!)

மற்ற தீர்மானங்களையும் வெளியிட்டால் காரியம் கெட்டுப் போய் விடும். ஆனால் மூன்றாவது தீர்மானம் மாத்திரம் நான் பொறாமையால் பிரேரேபித்ததாக சிலர் நினைக்கிறார்கள். என் கருத்தும் அதே தான்.

இந்த தீர்மானங்களிலிருந்து பத்திரிகைக் காரியாலயங்களில் நடக்கும் அநீதி ஒருவாறு தெரிகிறதல்லவா? பத்திராதிபர் போட்டிப் பந்தயத்தில், 100 கூபன் கட்டி பரிசு பெறாத ஆசாமியைப் போல் முகத்தை வைத்துக் கொண்டிருக்கும் போது ஒரு நகைச் சுவைக்கட்டுரையைப் படிக்க எடுக்கிறாரென்று வைத்துக் கொள்ளுவோம். உங்கள் கட்டுரை,

"என் முகம் மூன்றாம் பேஸ்து மாதிரி இருக்கிறது என்று என் நண்பனைக் கேட்டேன்."

என்று ஆரம்பித்தால் கட்டுரையின் கதி என்னவாகுமென்று யோசித்துப் பாருங்கள். அந்த சந்தர்ப்பத்தில் அதைப் படித்த குற்றம் அதிபரைச் சேர்ந்தது தானே. இம்மாதிரி செய்தெல்லாம் செய்து விட்டுக் கட்டுரையாளன்மீது குற்றம் சுமத்துவது பல பத்திராதிபர்களின் உயிர்க் கொள்கையாயிருக்கிறது.

இதை நிறுத்துவது நம் கடமையல்லவா? பத்திராதிபர்களுக்கு நாம் கொஞ்சம் உபதேசம் செய்ய வேண்டாமா? ஆனால் அப்படிச் செய்ய யாருக்கு தெரியும் என்று கேட்கிறீர்கள். அதாவது மணி கட்டப்பட வேண்டிய பூனை எது என்று அறிந்து கொண்டு விட்டீர்கள். கட்ட முடியாததென்றல்லவா கூறுகிறீர்கள்? பூனைக்கு எலிகளால் மணி கட்ட முடியாவிட்டாலும், எலிகள் தானே அதற்கு ஆகாரம் கொடுக்க வேண்டும். பழங் கதையில் தோன்றும் எலிகளுக்குக் கொஞ்சமாவது மூளை யிருந்திருந்தால் மணி கட்டா விட்டாலும் பூனையைப் பட்டினி போட்டிருக்கும். நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்? (கடைசி வாக்கியம் கட்டுரையாளருக்கு மாத்திரம். அதிபர்களும் சாதாரண வாசகர்களும் படிக்க வேண்டாம் ——— அதாவது இந்த வியாசமே தப்பித் தவறி அச்சிடப்பட்டு வெளியானால்.)

எப்படித் தெரியும்?

(பெ. கோ. சுந்தரராஜன்)

"ஒரு ஆங்கிலப் பத்திரிகையைப் படித்துக்கொண் டிருந்தேன். அதில் ஒரு கவிஞன் அண்ட முழுவதையும் ஒரு மரத்திற்கு ஒப்பிட்டு எழுதி யிருந்தான். என்ன அழகு என்ன மனோ பாவம்! மகா..........." என்று மிகைப் புகழ்ச்சியிலாழ்ந்த என் நண்பரைத் தடுத்து,

"ஏன் நம்முடைய பாரதியார் முந்தியே அம்மாதிரி வண்டி வண்டியாய் எழுதிக் கொட்டிவிட்டுப் போயிருக்கிறாரே" என்றேன்.

"இருக்கலாம். ஆனாலும் ஆங்கிலேயர்களைப்போல் நாம் ஒருநாளும் எழுத முடியாது சார். ஒவ்வொரு எண்ணமும் நம்மைத் திகைப்படையச் செய்கிறது" என்றார்.

வந்துவிட்டது கோபம் எனக்கு. "நீங்கள் கொஞ்சம் தமிழ் படித்திருந்தால் இப்படிப் பேசமாட்டீர்கள். பாரதியார் ஒருவரே எல்லாக் கவிகளுக்கும் பதிலளிப்பார். அவரை மிஞ்சிய மனோதர்மமும் ஒருவருக்கும் கிடையாது" என்றேன்.

"என்னமோ சார் உங்களுக்குக் கோபம் வருகிறது. தமிழில் அவ்வளவு எண்ணங்களையும் வெளிப்படுத்த முடியாதென்று நான் நினைக்கிறேன். வங்க பாஷையா அல்லது மகாராஷ்டிரமா? இவ்விரண்டு பாஷைகளும் எனக்குத் தெரியாவிட்டாலும் அந்த பாஷைகளில் தேர்ச்சி பெற்ற ஆசிரியர்களைப் பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறேன். தமிழில் அப்படி ஒருவரும் இருப்பதாகத் தோன்றவில்லை. நூற்றுக் கணக்கான பத்திரிகைகள் வருகின்றனவே யன்றி ஒன்றையும் படிக்கத் தோன்றுவதில்லை. ஒருவேளை நீங்கள் சொல்வதுபோல் தமிழிலும் பெரிய கவிகள் இருக்கலாம். எங்களைப் போன்றவர்களுக்கு எப்படித் தெரியும். இதற்காக ஒவ்வொரு புத்தகத்தையும் படித்துக்கொண் டிருக்க முடியுமா?"

தமிழைப்பற்றி இவ்வளவு அலட்சியமாகப் பேசிய அம்மனிதரோடு சண்டை போட்டுக்கொண்டு வந்துவிட்டேன்.

சில நாட்களுக்கு முன், ஒரு நண்பர் தமிழில் அழகான கட்டுரை ஒன்று எழுதியிருந்தார். மனோ பாவம், நடை, சொல் நயம் மூன்றும் பொருந்தி யிருந்தன. இதை முன் பேசிக்கொண் டிருந்த நண்பர் படித்தால் தெரியும் என்று எனக்குத் தோன்றிற்று. ஆனால் அவர் கையில் கொண்டுபோய்க் கொடுத்தாலன்றி படிக்கப்போவதில்லை. ஆங்கிலமே அதிகமாகப் படிப்பார். அவர்மீது கோபமே யென்றாலும் அவருக்குத் தமிழ் வளர்ச்சியை எடுத்துக் காட்டவேண்டு மென்ற ஆவலும் எனக்கு உண்டு.

அவர் மற்ற இந்தியமொழி யாசிரியர்களைப் புகழ்ந்ததில் எனக்கு மட்டற்ற பொறாமைதான். கொஞ்சம் யோசித்ததில் அவருக்கு வங்கமொழி தெரியாதிருந்தும் ஆங்கிலத்தின் மூலம் தாகூர் முதலிய பெருங்கவிகளின் எழுத்துகளைப் படித்தார் என்று தெரிந்தது. நம்முடைய பாரதியாரின் பாட்டுக்கள் மாத்திரம் ஆங்கிலத்திலும் பல்வேறு பாஷைகளிலும் மொழி பெயர்க்கப் பெற்றிருந்தால்...........!

ஆனால் சில தனித்தமி ழன்பர்கள் தமிழ் வளர்ந்தால் போதும் அது மற்றவர்களுக்குத் தெரியவேண்டிய அவசியமில்லை. இதற்காக ஆங்கிலத்தின் உதவி வேண்டிய தில்லை'யென் றுகூறுகிறார்கள். இவர்களில் அந்த அழகான கட்டுரை எழுதிய நண்பரும் ஒருவர். என் வீடு சுத்தமா யிருந்தாலென்ன எப்படி யிருந்தாலென்ன; மற்றவர்களுக்காக நான் குடி யிருக்கவில்லையே; மற்றவர்கள் பார்த்து மெச்சவேண்டாமே என்பதுதான் இவர்களுடைய கொள்கை.

போகட்டும்; இவர்கள் வீடு நன்றாயிருப்பதற்குத்தான் இவர்கள் பாடு படுகிறார்கள். ஆனால் இதைப் பார்த்து மற்றவர்களும் களிப்படைந்தால் வீட்டின் மகிமைதானே அதிகமாகப் போகிறது. இதை யார் இவர்களிடம் கூறுவது?

'கீதாஞ்சலி' ஆங்கிலமொழி பெயர்ப்புக்காக எழுதப்படவில்லை. ஆனால் அது வங்காளியில் மாத்திரம் இருந்திருந்தால் தாகூருக்கு நோபல் வெகுமதி கிடைத்திருக்குமா, அல்லது அவரை உலகம் புகழ்வதைப் பார்த்து நாம் மகிழ்ச்சி கொள்வதற்குத்தான் இடமிருக்குமா?

இந்திய பாஷைகளிலுள்ள எண்ணங்களை தேசத்தார் முழுதும் அறிந்து கொள்வதற்குச் சாதனமாக இப்பொழுது ஆங்கிலம் இருக்கிறது. இதில் கொஞ்சம் பழக்கமான நம் நாட்டாரிற் சிலரும் தாய் பாஷையில் அதிக சிரத்தை யெடுத்துக் கொள்வதில்லை. ஆப்பிரிகா தேசத்தில் ஏதோ சிறிய பாஷை யொன்றில் புத்தகம் எழுதப்பட்டால் அதை ஆங்கிலமூலம் படித்து அதிலடங்கி யிருக்கும் எண்ண சக்தியைப் பார்த்து வியப்படைகின்றனர்.

தமிழில் அவ்வாறு இருக்கும் விஷயங்களைத் தமிழில் படித்துத்தான் அறிந்துகொள்ள வேண்டும். மொழி பெயர்க்காமல் இருந்தால்தான் தமிழில் படிக்க ஆவல் உண்டாகும் என்று சிலர் கூறுவர். மேலும் பாரதியார் எழுதியதை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்துவிட்டால் அதைத் தமிழில் படிக்க முயலமாட்டார்க ளென்றும் கூறுவர்.

விக்டர் ஹ்யூகோ என்னும் பிரபல ப்ரெஞ்சு நாவலாசிரியரின் புத்தகங்களில் 'லாமிஸெராபிள்' என்பதே அதி மேன்மையானது. அதை மொழி பெயர்ப்பில் படித்து மகிழ்ந்த எத்தனையோ பேர் அதன் முழுசக்தியையும் உணரவேண்டி ப்ரெஞ்சு பாஷையையே கற்றுக்கொள்ள முற்பட்டதுண்டு.

பாரதியார் நம் தமிழன்னையின் இணையற்ற புதல்வன். உலகத்தில் எத்தனை நாடுகள், தமிழ் நாட்டைத் தவிர, இவரை அறியும்?

இவருடைய வன்மை ஆங்கில விளையாட்டில் காலங்கழிக்கும் நமது நாட்டுப் படிப்பாளிகளுக்கு எப்படித் தெரியும்?

"வாசகனுக்குப் புதிய புதிய ரஸனைகளை அறிய அடியெடுத்துத் தருபவனும், ஆசிரியனுக்கு மதிப்பு சம்பாதித்துத் தருபவனும் விமர்சகனே யல்லவா?" என்று சங்கு ஸுப்ரஹ்மணியன் எழுதியது, மொழி பெயர்ப்பாளனுக்கும் ஒருவாறு பொருந்தும். மறுமொழி அறிக்கையும் ஒரு விமர்சனம் தானே.

மற்ற மொழிகளிலிருந்து தமிழில் வேண்டிய மட்டும் நூல்களைப் பெயர்த்தாய் விட்டது. தமிழிலும் சில நல்ல விஷயங்க ளிருக்கின்றன வென்பதை உலகுக்கு நாம் அறிவிக்க வேண்டாமா? ஆங்கில முதலிய பாஷைகளைத் 'தழுவி'யதுபோதும். நமது சொந்த மொழியைக் கொஞ்சம் 'தழுவி' நிமிர்த்தி நிறுத்தக்கூடாதா?

கவூர்— இத்தாலிய சுதந்திர வீரன்

(1812—1861)

சுமார் எழுபது வருஷங்களுக்கு முன்னர், இதாலி தேசம் ஒன்றுபட்ட நாடாக விருக்கவில்லை அதற்கு சுதந்திரமும் இருக்கவில்லை. இப்பொழுது இதாலி, ஐரோப்பாவிலும்,—உலகத்திலும் சரி—பெரிய பதவியுடன் வாழ்கிறது. இப்பேர்ப்பட்ட நாடு—அதிலும் வெள்ளைக்காரர்கள் வசிக்கும் நாடு, அடிமைத்தனத்தில் இருக்கவாவது, வீண் புரளியாக விருக்கிறதே என்று சிலர் நினைக்கலாம்.

இதாலி அடிமை நாடாக இருந்தது உண்மை. புரளியில்லை. இதாலி தேசத்தைப் பல கூறுகளாகப் பிரித்து, தன் "யானைக்காலின்கீழ்" ஆஸ்திரிய ஸாம்ராஜ்யம், அழுத்தி வைத்துக் கொண்டிருந்தது. இந்தியாவிலிருக்கும் சுதேச சமஸ்தானங்களைப் போலவே, இதாலியிலும் சின்ன ராஜ்யங்கள் இருந்தன. அவைகள் யாவும், ஆஸ்திரியாவின் கட்டளைக்குப் பயந்து, கை கட்டி வாழ்ந்துவந்தன என்று சொல்லலாம்.

இதாலியின் விடுதலைக்கு மூல காரணர்களாயிருந்த பேர்கள் நான்கு பேர்கள் என்று சொல்லலாம. (1) மாஜினி (2) கரிபால்டி (3) கவூர் (4) விக்டர் எம்மானுவல் மன்னன். விக்டர் எம்மானுவல், பீட்மாண்ட் என்ற சிறிய சமஸ்தானத்து மன்னன். நமது, திருவாங்கூரும், கொச்சியும்—இரண்டும் சேர்ந்ததுபோல இருக்கும். பீட்மாண்ட் சமஸ்தானத்தில் கவூர் பிரதம மந்திரி.

கவூரின் ஜீவிய சரித்திரம் வெகு ஆச்சரியமாயிருக்கும். அவர் கடைசி வரையிலும் கலியாணம் செய்துகொள்ளவில்லை. பிரும்மசாரியாகவே மாண்டார். இதாலியின் ஒற்றுமை, இதாலியின் விடுதலை — இவைகள் தான் அவருடைய கனவும் நனவும். எந்தப் பேச்சைப் பேசினாலும், . இவ்விரண்டும் அவர் பேச்சுக்குள் நுழையாமலிருந்ததில்லை. அவர் இறக்கும்பொழுது அவருக்கு ஐம்பது வயது நிறையவில்லை.

அடிமை தேசத்தின் விடுதலைக்காக, ஏழைகள் தான் போராடுவார்கள் என்று சாதாரணமாய்ச் சொல்லுவதுண்டு. எந்த தேசமும் அதில் வாழ்ந்து மடியும் எல்லோருக்கும் சொந்தம். எந்தத் தனி வகுப்புக்கும், கூட்டத்துக்கும், தனித்த சொத்தல்ல. தனவந்தர்களும் பட்டதாரிகளும் தேசத்துக்காக உழைத்துப் பாடுபட்டு, அகால மரணம் அடைந்திருக்கிறார்கள் என்பதற்கு கவூர் அவர்களின் ஜீவிய சரித்திரம் ஒரு சிறந்த உதாரணமாகும்.

காமில்லோ கவூர் என்பவர் பிரபு கூட்டத்தில் பிறந்தவர்; எனவே அரண்மனை நேசம் கொண்டவர். பீட்மாண்ட் ஸமஸ்தானத்தில், அவருடைய தகப்பனார் பெரிய உத்தியோகம் வகித்திருந்தார். கவூர், தகப்பனாரின் இரண்டாவது பிள்ளை. எனவே, அவருக்கு தகப்பனாரின் சொத்தில், யாதொரு உரிமையும் கிடையாது. இது மேல் நாட்டுச் சட்டம்.

முதலில், கவூர், சிறிய பள்ளிக்கூடம் ஒன்றில் படித்தார். அவருக்கு கணிதத்தில் ரொம்ப ருசி. எனவே, அவர் தகப்பனார், கவூரை, சேனையில் எஞ்சினீர் பதவி பெற, பயிற்சி யடையும்படி அனுப்பி வைத்தார். கவூருக்கு இது பிடிக்கவில்லை. இருந்தாலும் சின்னப் பிள்ளையானதால், தகப்பனாரின் வார்த்தையைத் தட்டமுடியாமல், சேனையில் போய்ச் சேர்ந்து, எஞ்சினீர் பரீட்சையில் முதலில் தேறினார். பிறகு ராணுவ சம்பந்தமாக, கோட்டைகள் பழுது பார்ப்பது முதலிய மராமத்து வேலையில் அமர்ந்தார்.

ருசியில்லாத வேலையில், கவூர் எவ்வளவு காலம் இருக்கமுடியும்? இரண்டொரு வருஷம் இருந்த பின்னர், வேலையை ராஜி நாமா செய்வதற்கு முன், பீட்மாண்டு ராஜ வம்சத்தாரையும் பிரபுக்களையும் பற்றி உதாஸீனமாகப் பேசியதாக, பீட்மாண்ட் மன்னன் செவிக்கு எட்டிற்று. கவூரின் தகப்பனாருக்கு தமது பிள்ளையின் பேரில் கோபம்.

ஆனால் அதைக் காட்டிக்கொள்ளாமல், தகப்பனார், சிறிய எஸ்டேட்டு ஒன்று கவூருக்கு வாங்கிக்கொடுத்து, அதை நிர்வாகம் செய்யும்படிக்கு, அவரிடம் சொன்னார். இந்த வேலையும் கவூருக்குப் பிடிக்கவில்லை; என்றாலும் பெற்றோர்களின் சொல்லைத் தட்டமுடியாமல், எஸ்டேட்டு நிர்வாகத்தை ஏற்

புட்டி விலை அணா 12. மேற் செலவு வேறு.

றுக்கொண்டார். ஐந்து வருஷ காலத்துக்குள், எஸ்டேட்டை பொன் விளையும் செழிப்பான பூமியாகச் செய்துவிட்டார். விவசாயத்தில் புதிய முறைகளை நாடினர். என்றும் அரசியலும் தேச விடுதலையும்தான் அவரது லட்சியங்கள்.

இதன் மத்தியில், இதாலியிலிருந்து, ஸ்விட்ஸர்லாந்து, பிரான்சு, இங்கிலாந்து முதலிய நாடுகளுக்குச்சென்று, அந்த நாடுகளின் அரசியல் நிர்வாகத்தையும் பழக்க வழக்கங்களையும் நேரில் பார்த்து, தமது அறிவையும் அனுபவத்தையும் வளர்த்துக்கொண்டு வந்தார் கவூர்.

இதற்குள், பீட்மாண்டு சமஸ்தானத்தின் பார்லிமெண்டு சபையின் ஆதிக்கத்தை, மன்னன் ஏற்றுக்கொண்டார். பார்லிமெண்டு சபையில் கவூர் ஒரு மெம்பர் ஆனர்.

இதற்குமுன், தேச விடுதலையில் பற்றுக்கொண்ட சில நண்பர்களுடன்கூட, கவூர் "ரிஸார்க்குமெண்டோ" என்ற பத்திரிகையை ஆரம்பித்தார். கவூருக்கு எழுத்து வன்மை அதிகமாயில்லாவிட்டாலும், தாம் சொல்லுவது உண்மை என்று மற்றவர்கள் ஏற்கும்படியான எழுத்தில், அவர் கை தேர்ந்தவர்.

பார்லிமெண்டு சபையில், சிறுகச் சிறுக, அவருக்கு ஒருவகைத் தலைமைப் பதவி, ஒரு கூட்டத்தாரால் அளிக்கப்பட்டது. சட்ட வரம்புக்குட்பட்ட கிளர்ச்சிக்காரர், சீர்திருத்தக்காரர் என்ற பெயர், கவூருக்கு இருந்தாலும், அவர் பெரிய புரட்சிக்காரர். எந்த சாதனத்தையும் புரட்சிக்குச் சாதகமாக, விடுதலைக்குச் சாதகமாக, மனமும் திடமும் இருந்தால், உபயோகப்படுத்திக் கொள்ளலாம் என்பது கவூரின் மனப்பான்மை. இணையற்ற ராஜ தந்திரி.

சிறிது காலம் சென்றபின், கவூர் பீட்மாண்ட் சமஸ்தானத்தின் பிரதம மந்திரியானர். அதுமுதல் சுமார் பத்து வருஷ காலத்தில், அவருடைய உழைப்பையும் ராஜதந்திரத்தையும் தீர்க்காலோசனையையும் பற்றி, எவ்வளவு வியந்து பேசினலும் போதாது.

பரஸ்பர எதிரிகளான இங்கிலாந்தையும் பிரான்சையும் இதாலியின் விடுதலை லட்சியத்தில் ஒற்றுமையுடன் உழைக்கும்படி செய்த சாமர்த்தியம் கவூருடையது. சட்ட வரம்பு என்று தமக்கு ஒரு மரியாதை வரம்பு கோலிக்கொண்ட போதிலும், கவூர் இதாலிய புரட்சிக்காரர்களுக்கு நண்பன். ஐரோப்பிய ராஜதந்திரிகள் யாவரையும் கண்ணில் விரலைக் கொடுத்து ஆட்டிவிட்டார்.

இதாலி தேசத்தின் விடுதலைக்குக் குறுக்கே நின்ற ஆஸ்திரியாவுக்கு, மற்ற நாடுகளின் அன்பு ஏற்படாமல் அடித்து. அதைத் தனித்த துண்டாக, நிறுத்திவிட்டார். பிரஞ்சு, இங்கிலீஷ்காரர்களின் உதவியைக் கொண்டு பீட்மாண்டு ஆஸ்திரியாவோடு போர் செய்து வெற்றி பெறும் நிலைக்கு, பீட்மாண்டைக் கொண்டுவந்து, இதாலியை ஒற்றுமைப் படுத்தினர். இதாலி விடுதலையடைந்தது.

ஸ்ரீயுத வ. வே. சு. அய்யர் எழுதிய

மங்கையர்க்கரசியின்

காதல் முதலிய கதைகள்

(தபாற்கூலி யுள்பட 10 அணு ஸ்டாம்பு)

தி யுனைடெட் இந்தியா
லைப் அஷ்யூரன்ஸ் கம்பெனி, லிமிடெட்.

தலைமை ஆபீஸ் மதறாஸ். 1906ல் ஸ்தாபிக்கப்பட்டது.

டிரஸ்டி:—சென்னை அபிஷியல் டிரஸ்டி.

2 கோடி ரூபாய்களுக்கு அதிகமான பாலிஸிகள். 55 லக்ஷத்திற்கும் அதிகமாகவே ஆஸ்தி.
12 லக்ஷத்திற்கும் மேலாகவே வருட வருமானம்.

இக்கம்பெனிக்கு உண்டான விசேஷ லக்ஷணங்கள் பலவற்றுள் ஒரு சில:—
இக்கம்பெனியின் நிதி பூரண நம்பிக்கையுள்ள வகையிலிருக்கிறது.
இது ஊரூராகவும் பக்ஷபாத மின்றியும் பாத்யஸ்தர்களுக்குப் பணம் கொடுக்கிறது.
இதில் சிக்கனமான நிர்வாகம் நடக்கிறது.
மட்டான சந்தா, அவைகளுடன் கூடி திருப்திகரமான போனஸ் பணம்.
பாலிஸிதாரர்களுக்கு வேண்டிய சௌகரியங்களைச் சித்தமாகவும், வெகு திறமையுடனும், தயவோடும் செய்து தருகிறது.

பூரண விவரங்களுக்குத் தலைமை ஆபீஸிற்கோ, அல்லது நாட்டின் பல பாகங்களிலும் உள்ள எங்கள் கம்பெனிப் பிரதிநிதிகளுக்கோ எழுதித் தாமதமின்றித் தெரிந்து கொள்ளலாம்.

"யுனைடெட் இந்தியா அஷ்யூரன்ஸ் பில்டிங்ஸ்"
செம்புதாஸ் தெரு, சென்னை.

M. K. ஸ்ரீனிவாசன்,
மானேஜிங் டைரெக்டர்.

கோட்டை வீடு

(வ. ரா. எழுதியது.)

"நான் எங்க அம்மா மாதிரி புடவை கட்டிக்கப் போறேனே" என்றாள் ராஜீ.

"எனக்கு மட்டும் தெரியாதோ? நான் எங்க அப்பா மாதிரி வேஷ்டி கட்டிக்கிறேன்" என்றான் ராஜன்.

"நான் எங்க அம்மா நகையைப் போட்டுக்குவேன், நீ என்ன பண்ணுவை" என்று ராஜீ கூத்தாடினாள்.

ராஜனுக்கு கொஞ்சம் திகைப்பு உண்டாயிற்று. அவன் தகப்பனாரோ, கடுக்கன், மோதிரம் முதலிய ஒரு அலங்காரமும் செய்துகொள்ளுவதில்லை; ராஜீக்குப் போட்டியாக, அவனால் ஒன்றும் சொல்ல முடியவில்லை.

ராஜீயோ, அட்டஹாசமாய், "டான்ஸ்" ஆடுவதுமாதிரி குதிக்கிறாள். "என்ன பண்ணுவை, என்ன பண்ணுவை" என்று சொல்லிக்கொண்டே ராஜீ குதிக்கிறாள்.

"எங்கப்பா மூக்குக் கண்ணாடியை, மூக்கிலே போட்டுக்குவேன்; அப்பா செருப்பை காலிலே போட்டுண்டு, ஜோரா நடப்பேன். இதோ பாரு. இந்த மாதிரி நடப்பேன். உன்னாலே, அந்தமாதிரி செய்யமுடியுமோ" என்று ஆவேசம் வந்த கவி ஆனந்த மடைவதைப்போல, ராஜன் பெரு மகிழ்ச்சியுடன் சொன்னான்.

ராஜீ என்ன செய்வாள் பாவம்? ராஜன் மாதிரி, அவள் செய்யமுடியாது போலத்தான், அவளுக்குத் தோன்றிற்று. கண்ணுக்குக் கண்ணாடியும் காலுக்கு செருப்பும்—பெரிய சங்கதிகள் தானே?

ராஜீக்கு முகவாட்டம் ஏற்பட்டது. இந்த சமயத்தில், அவளுடைய "டான்ஸ்" அடியோடு நின்று போய் விட்டது. ராஜனை நேரே பார்க்க, அவளுக்கு இஷ்டமில்லை.

ராஜீ தரையில் உட்கார்ந்து கொண்டாள். "குறுக்கும் நெடுக்குமாக" தரையில் கோடுகள் இழுக்க ஆரம்பித்தாள். அந்தப் பக்கம் இந்தப் பக்கம் பார்த்து, அடிக்கொருதரம், எச்சில் துப்பிக்கொண் டிருந்தாள். அவள் தோத்துப் போய் விட்டாளல்லவா? வெட்கத்தை உள்ளே விழுங்கமுடியுமோ? கொஞ்சங்கொஞ்சமாக வெளியே துப்பிக்கொண்டிருக்கிறாள். இயற்கையின் சேஷ்டை!

"ராஜா, நீ ரொம்ப சமத்துமாதிரி பேசிவிட்டாயோ? நான் கலியாணம் பண்ணிக்கப்போறேனே" என்று ராக ஆலாபனம் செய்வதுபோல, நீட்டிக் கொண்டே சொன்னாள்.

இதைச் சொல்லிவிட்டு, தனக்கு ஏதோ பெரிய ஜயம் வந்ததுபோல எண்ணிக்கொண்டு, ராஜனுடைய முகத்தை, ஒரு முறை, பூராவாக, பார்த்து "போட்டோ" பிடித்தாள்.

"ரொம்பப் பிரமாதமோ! நீ செய்கிறது என்னாலே முடியாதோ? நானும் கலியாணம் பண்ணிக்கிறேன். எனக்கு மாத்திரம் முடியாதோ" என்று, குன்றத்தின்மேலிருந்த கோட்டையை ஆயாசமில்லாமல் பிடித்துவிட்ட வீரனைப்போல பேசினான் ராஜன்.

"சொன்னதைத் திருப்பிச் சொல்லுமாம் கிளிப்பிள்ளை. அசடாய்ப் பேசுமாம் ஆம்பிள்ளை" என்று சொல்லி, மறுபடியும் ராஜீ தனது "டான்ஸ்"க்கு ஆரம்பித்து விட்டாள். டான்ஸ் என்றால் உங்கள்வீட்டு, எங்கள் வீட்டு "டான்ஸா"? சினிமா "டான்ஸா"? சின்ன மேள டான்ஸா? சுருதி, லயம், தாளம் — எதற்காவது கட்டுப்பட்ட டான்ஸா?

"அசடாய்ப் பேசுமாம் ஆம்பிள்ளை" —இதுதான் அவளுடைய நர்த்தனத்துக்குப் பல்லவி. ஒருமுறை குதிப்பாள். ராஜனுடைய முகத்தைப் பார்ப்பாள். அசடு, அசடு என்று சொன்னால், யாருடைய முகம் சந்திரனைப் போல இருக்கும்?

ராஜனுடைய முழுமதி முகம், "மூளிக்கடுகு மூஞ்சி"யாக ஆகிவிட்டது. இதைப் பார்க்கப் பார்க்க, ராஜீக்குக் கொம்மாளம்; அஷ்ட திக்குகளையும் உதைத்துத் தள்ளுகிற மாதிரி, டான்ஸ். அவைகளின் பேரில் மட்டும் ராஜீயின் கால்கள் பட்டிருந்ததோ, அவைகள் சடசடவென்று சரிந்து விழுந்திருக்கும். முழங்காலைக் கொண்டு, மோட்டை வளையை உதைக்க முடியாது என்று யார்சொன்னாலும், அது ராஜீயின் இந்தப் பருவத்தில் ஏறுமா? ராஜீக்கு வயது ஒன்பது தானே? அவளுக்கு ஒரு வயது மூத்தவன் ராஜன்.

குரங்கு சாகக் கொடுத்த ஆண்டி என்று சொன்னால், ஆண்டிக்குக் கோபம் வந்தாலும் வரும். இருந்தாலும் அந்த மாதிரி விழித்துக்கொண் டிருந்தான் ராஜன். தப்பி ஓடிய மீனைக் கவனித்துக்கொண் டிருக்கும் கொக்கைப்போல, ஆத்திரத்துடன் மௌனமாயிருந்தான் என்றும் சொல்லலாம்.

வெற்றிக் காலத்தில் விபரீத புத்தி தோன்றும் என்று சொல்லுவார்கள். அப்பொழுது தலைகால் தெரியாதாம். (அக்காலத்தில், தலையால் நடந்து, காலால் யோசிப்பார்களோ, என்னமோ?)

ஜயமும் டான்ஸும் சேர்ந்து, ராஜீக்கு தலைக்கிருக்கு உண்டாக்கிவிட்டன. இன்னுமொரு முறை, ராஜனை அவமானப்படுத்த வேண்டு மென்று திடீரென்று, ராஜீக்குத் தோன்றிற்று. யாருமே, எதையும் அனேகமாய் போ

சித்துச் செய்வதில்லை. மான, அவமான சங்கதிகளில், யோசித்தால், காரியம் கெட்டுப்போகும். மேலும், அவைகள் தாமாகத் தோன்றும் நிகழ்ச்சிகள். சட்டியிலிருந்தால், அகப்பையில் வருவது எவ்வளவு நிச்சயமோ, அதுபோலவே, உள்ளுக்குள் ளிருக்கிற மான உணர்ச்சி, வெளித் தோன்றத் தான் செய்யும். இது இயற்கை, கற்றுக் கொடுக்கிற பாடமல்ல.

தலைக் கிருக்கு அடைந்த ராஜீ திடீரென்று, நான் தாலி கட்டிக்கப்போறேன். நீ என்ன பண்ணுவை" என்று சொல்லிக்கொண்டே, நர்த்தனத்தில் இறங்கிவிட்டாள்.

ராஜன் வாடி யிருக்கிற கொக்கு; பாயப்பதுங்கி நிற்கும் புலி. உடனே, அவனுடைய உடம்பில் ஒரு பூரிப்பு ஏற்பட்டது. ஒரு பாய்ச்சல் பாய்ந்தான். ராஜீயின் கைகளைக் கெட்டியாகப் பிடித்துக்கொண்டான். "நான் தாலி கட்டப்போறேன்; நீ என்ன பண்ணமுடியும்" என்று எக்காளம் போடும் காளையைப்போல சத்தம் போட்டான்.

"என் கையை விடு, நான் அம்மா கிட்டச் சொல்லுவேன். விடரயா, இல்லையா" என்றாள் ராஜீ.

"கொஞ்ச நேரத்துக்கு முந்தி, நீ டான்ஸ் ஆடினது மாதிரி, இப்போ இல்லையோ? தோத்தால், அழரயே! அம்மாகிட்ட சொல்றேன் என்கிறயே! ஆப்பிட்டுக் கொண்டால், அழுவாள் பொம்பள்ளை" என்று கைகளைக் கொட்டிக்கொண்டு, பாடினான் ராஜன்.

ராஜீக்கோ கோபம். ரோஸம் தளதள வென்று முகத்தில் கொதிக்கிறது. உடம்பிலிருக்கிற ரத்தமெல்லாம், முகத்துக்கு வந்துவிட்டது. அவமானத்தாலும் தோல்வியாலும், எப்பொழுதும் முகத்துக்குத்தானே ஆபத்து வருகிறது! முகத்தை இந்த ஆபத்திலிருந்து காப்பாற்ற வேண்டாமா? அதனாலேதான், உடம்பு ரத்த முழுமையும், முகத்திலே வந்து கூடிக் குவிந்து கொள்ளுகிறது.

"பெரிய மனுஷன் மாதிரி பேசிவிட்டயே! நீ யாருக்குத் தாலிகட்டப் போறே! உனக்கு யார் இருக்கா" என்று என்னமோ பேசிவிட்டாள் ராஜீ.

"யாருக்கா? உனக்கு. வேறே யாருக்கும் நான் தாலி கட்டமாட்டேன். ராஜீ! உனக்குத் தெரிகிறதா" என்று சிரித்துச் சொல்லிக் கொண்டே அவளுடைய கைகளைப் பிடித்துக் கொண்டான்.

ராஜீ முகத்தைத் தொங்கப் போட்டுக்கொண்டாள். அவளுடைய முகத்தில் இப்பொழுது ரோஸமில்லை. வந்த காரியம் ஆனவுடனே, உடம்பு ரத்தமெல்லாம், ராஜீயின் முகத்தை கலியாணம் விசாரித்துவிட்டு, விருந்துக்கு வருவதாகச் சொல்லி விடை பெற்றுக் கொண்டு, உடம்பு சுற்றுப் பிரயாணத்துக்கு ஆரம்பித்துவிட்டது.

"ராஜா! நீ சுத்த அசடு" என்றாள் ராஜீ.

"அசட்டுக் கையை விட்டுவிடேன்! என் கையிலே, ஏன் நகத்தாலே கோடு இழுக்கிறே! நான் ஆத்துக்குப் போறேன்" என்றான் ராஜன்.

"உன் கை தங்கக்கையோன்ன? கோடு இழுத்தால், அழகு குறஞ்சு போய்விடும். போடா அசடே! ஆத்துக்குப் போயேன். நான் இங்கேயே, வீடு கட்டி விளையாடறேன்" என்றாள் ராஜீ.

"நான் ஆத்துக்குப் போகமாட்டேன். நீ என்ன செய்வே? நான் இங்கேதா னிருப்பேன். அப்புறம் நீ என்ன பண்ணுவை" என்றான் ராஜன்.

"நான் வீடு கட்டறதை நீ பார்த்துக் கொண்டு, சும்மா உட்கார்ந்திருக்கப் படாது. நீ எஜமானோ? நான் கூலி வேலைக்காரியோ? வேணும்னு, நீயும் ஒரு வீடு கட்டிக்கோ" என்றாள்.

"நான் தனியாய் வீடுகட்ட மாட்டேன். சேர்ந்துதான் கட்டுவேன். நான் ஏன் சும்மா யிருக்கப்படாது? சும்மாத்தான் இருப்பேன்" என்றான்.

"சும்மா நீ உன் வீட்டிலிரு. நான் கட்டற வீட்டைப் பார்த்துக்கொண்டிருக்கப்படாது. கட்டற வீட்டுக்கு நிஷ்டூரம் சொல்லுவே" என்றாள் ராஜீ.

"நான் சும்மாப் பார்த்துச்கொண்டிருக்கிறேன். நான் வாய்திறக்கவில்லை. இல்லாவிட்டால், ஒன்று இரண்டு, ஆயிரம் வரையில் எண்ணிக்கொண்டிருக் கட்டுமா" என்றான் ராஜன்.

"நான் வீடு கட்டறபொழுது, ஒன்று இரண்டு எண்ணிக்கொண்டு, சும்மா யிருக்கத்தான் உனக்குத் தெரியும். ஆம்பிளையோன்ன!" என்றாள் ராஜீ.

"என்ன பெரிய மனுஷி மாதிரி பேசறே! நான் அசடுதான். அசட்டைக் கட்டிண்டுதான், நீ காலம் தள்ளணும்" என்று சொல்லி, ராஜன் சிரித்தான்.

பெரியவர்கள் இப்படிச் சிரித்தால், அதை அசட்டுச் சிரிப்பு என்று சொல்லலாம். குழந்தைகள் இயற்கையாகச் செய்கிற காரியத்துக்கு, என்ன அர்த்தம் கற்பிக்கமுடியும்? பார்த்து ஆனந்தப்படலாம் அல்லது ஆத்திரப்படலாம். என்ன செய்தாலும் கடைசியில் குழந்தைகளைக் கெஞ்சவேண்டியவர்கள் பெரியவர்கள். மிஞ்சினால் குழந்தைகளிடம் எந்தக் காரியமும் பலிக்காது.

"நீ சொன்னாலும் சரி, சொல்லாவிட்டாலும் சரி, நான் பெரிய மனுஷிதான். நீ சின்ன மனுஷன். நான் வீடு கட்டணும் என்றேன். நீ வேடிக்கை பார்ப்பேன் என்கிறே! யார் பெரியவா, யார் சின்னவா? சொல்லு பார்ப்போம்" என்றாள் ராஜீ.

சென்னையில் உங்களுக்குத் தேரிய வேண்டியவர்

ஆங்கிலோ-பர்மா பின்மென்

இடம்: 41, பிராட்வே.

4-C, சல்லியன்ஸ் கார்டன் ரோட், மயிலாப்பூர்.

சலவை முதல்தரமா யிருக்க வேண்டுமா? சுத்தமாய் விலை உயர்ந்த உடைகளை ஜலத்தில் இடாமல் பெட்ரோலில் செய்து தரவேண்டுமா? சாயம் அதுகளின் நிலைமை மாறுமலும் சாயம் போட்டுத் தரவேண்டுமானல், ஆங்கிலோ-பர்மா பின்மென்காரரிடமே உங்கள் துணிகளை அனுப்புங்கள்.

☞ கோயில்கள், மசூதிகள், சர்ச்சுகள்—இவைகள் துணிகளுக்கு இலவசச் சலவை.

"நீ தான் பெரிய மனுஷி. தடையென்ன" என்றான் ராஜன்.

"புலியே! ஜம்பம் பேசறயே! உனக்குத் தாலி கட்டத்தான் தெரியும். உனக்கு வீடு கட்டத் தெரியாது. பேசாதே! திரும்பிப் பார்க்காமே, ஓட்டமெடு" என்றாள் ராஜீ. மறுபடியும் 'டான்ஸ்'.

ராஜனுக்கு ஆத்திரம். "ரொம்பப் பெரிய பேச்செல்லாம் பேசறயே! எனக்குத் தாலியும் கட்டமுடியும் வீடும் கட்டத்தெரியும்" என்று அவன் படபடவென்று பேசினான்.

"ஏண்டா, வீணாய்ப் பேசறே! நம்ப வீட்டு மண் எல்லாத்தையும் ஒண்ணாய்ச் சேரு. நம்ம வீட்டை கோட்டை மாதிரி கட்டணும். நம்ம புஸ்தகத்திலிருக்கே, அந்த கோட்டை மாதிரி. நம்ப வீட்டை யாரும் கலைக்காமே, நீ பார்த்துக் கொள்ளணும். பாட்டி சொல்றது மாதிரி, நீ எட்டி வெட்டி சிப்பாயாக இருக்கப்படாது. மண்ணைச் சேரு. சுவர் எழுப்பணும். ஏன் கையைக் கட்டிக்கொண்டு, சும்மாயிருக்கே! நான் கூட்டறேன் மண்ணை. அதோ பார், அந்த இடத்தில் கொண்டு போய்ச் சேரு" என்றாள்.

இரண்டு பேரும் புது வீடு கட்ட, மண்ணை ஒன்றாய்ச் சேர்த்துக்கொண்டிருந்தார்கள். அந்த சமயம், அவர்களூர் "கூத்தாடி" தாத்தா வந்து சேர்ந்தார். அவர் சிரித்துக்கொண்டே வந்தார்.

"என்ன தாத்தா! சிரிக்கிறீர்கள்" என்று குழந்தைகள் இரண்டுபேரும் ஏக காலத்தில் சிரித்தார்கள். பொக்கென்று சிரித்தவுடனே, தாத்தாவின் முகம் தொங்கிப் போய்விட்டது.

"என்ன தாத்தா! நாங்கள் கட்டற வீடு, உங்களுக்கு ஷோக்காய்ப் படவில்லையோ? நீங்களும் கொஞ்சம் மண்ணைச் சேருங்களேன்" என்றான் ராஜன்.

"போடா போ ராஜா! தாத்தாவுக்குப் பொக்கை வாயைக் காட்டிக் கொண்டு, அர்த்தமில்லாமல் சிரிக்கத் தெரியும். அவருக்கு வீடு கட்டத் தெரியாது. தாத்தா! நீங்கள் போங்கள். நாங்கள் வீடு கட்டியானதும், கிரகப்பிரவேசம் செய்யப்போகிறோம். கிரகப் பிரவேசத்துக்கு உங்களை அழைக்கிறோம். வந்து விருந்து சாப்பிட்டு விட்டுப் போங்கள்" என்றாள் ராஜீ.

எல்லோரும் சிரித்தார்கள்.

அம்புலி

'ஜோதி' பாடியது

1. அத்தனைபாலைக் கொட்டிச் சர்க்கரை போட்டே
        அளியக் குழைந்தசோற்றை யிட்டுப் பிசைந்து
மெத்தவுங் கொஞ்சிக்கொஞ்சி வேடிக்கை பேசி
        வெள்ளைநிலாவைக் காட்டி வாயி லூட்டினேன்
எத்தனை துஷ்டத்தனம்! என்ன கொழுப்பங்
        கெல்லம் உமிழ்ந்துவிட்டே அம்புலி காட்டித்
தத்தி எழும்பியிந்த வெண்ணெ யுருண்டை
        தந்திட வேண்டுமென்று தொந்தரை செய்வான்.

2. வீதியில் என்ன எவர் விலைக்கு விற்றாலும்
        வீட்டுக்குள் ளேயழைத்தென் மூன்றுனைப்பிடித்
தோதி யிழுத்து வேண்டும் என்றழுகிறான்
        ஒன்று விடாமல்வாங்கிக் கொடுத்து விடுவேன்
மீது நிலாப்பொழியும் அம்புலி காட்டி
        மெல்லவே சோற்றை யவன்வாயி லூட்டினேன்
'தூது' எனத்துப்பிவிட் டம்மதி காட்டித்
        தோசை யிதுவெனக்கு வேண்டு மென்கிறான்.

3. கையிலே வெள்ளிக் கிண்ணம்கொண் டதனிலோர்
        கரண்டி அளிந்தசோற்றை இட்டு ரசமும்
நெய்யும் நிறையவிட்டுப் பிசைந்து வெளியே
        நின்று நிலாவைக்காட்டி ஊட்டி இடையே
பைய வடகத்தினை வாயிலே வைத்தேன்
        படுத்திய பாட்டினுக் கோரளவு கண்டிலேன்
கையி லெடுத் தெறிந்துவிட் டம்புலியைக்
        காட்டி 'அந்தஅப்பளம் வேண்டும்' என்கின்றான்.

ரூபாயின் ஆயுள் ப்ரமாணம்

ஒரு வெள்ளி ரூபாயின் வயதென்ன? அதற்கு, இயற்கையாகச் சாவு நேர்ந்த பின்னர், அது எங்கே போய்ச் சேருகிறது? மனிதர்களைப்பற்றிக் கேட்பது போலவே, ரூபாயைப் பற்றியும் கேட்கலாம். ருசியான கேள்விகள்.

ரூபாயின் சராசரி வாழ்வு ஐம்பத்தைந்து வருஷம். அது சொல்லாமற் போனாலொழிய, (நல்ல ரூபாயும் செல்லாமற் போவதற்கு சில திருட்டுத்தனங்கள் உண்டு. அவைகள் கீழே கூறப்படும்) இந்த ஐம்பத்தைந்து வருஷக் காலத்தில், வியாபார முறையில், கை மாறிக்கொண்டே யிருந்திருக்கும்.

இந்தக் காலத்தில், ரூபாயின் எடை சிறிது குறைந்துபோ யிருக்கும். மூன்றரைக் குண்டுமணி வரையில், ரூபாய் எடை குறைந்து போனாலும், அதன் ரூபாய் மதிப்பு கெட்டுக் குறைந்து போவதில்லை. அதற்குக் கீழ், எடை குறைந்து போனால், கர்ரென்ஸி ஆபீஸ் அதை எடுத்துக்கொண்டு, உருக்கி, புது ரூபாய் செய்ய உபயோகப் படுத்தப்படுகிறது.

பூமியில் ரூபாயைப் புதைத்தாலும் சரி, அதை பையில் கட்டிப்போட்டு வைத்திருந்தாலும் சரி, அது எடையில் குறைவதில்லை. "பூதம் காத்துப்போவதால்," ரூபாயில் ஏதேனும் தூசி படிந்திருந்தால், அது தண்ணீரைவிட்டுக் கழுவினால் போய்விடும்.

கிழக்கு இந்தியா கம்பெனி முத்திரை குத்தி, இந்தியாவில் முதன் முதலாக, 1878-ம் வருஷத்தில், ரூபாய் அடிக்கப்பட்டது. இதற்கு முன், இந்தியாவில் செலவாணியான ரூபாய்கள், லண்டனில் அடிக்கப்பட்டு, ஒருபக்கத்தில் எலிஜபெத் ராணியின் கவசமும் இன்னொரு பக்கத்தில் கம்பிக் கதவும், முத்திரை குத்தப்பட்டு, ரூபாய் அடிக்கப்பட்டது.

சென்ற நூற்றாண்டில், 1835, 1840, 1862, 1874—இந்த வருஷங்களில் ரூபாய் அடிக்கப்பட்டது. இரண்டு தினுசான ரூபாய்கள். 1862—1874 வருஷங்களுக்குள் அடிக்கப்பட்ட ரூபாய்களில் 1862 என்று முத்திரை குத்தப்பட்டிருக்கும். ஆனால் இலக்கங்களின் பேரில் புள்ளி குத்தியிருக்கும். அந்த புள்ளிகளைக் கணக்குப் போட்டு, அது எந்த வருஷத்தில் (1862—1874 வருஷங்களுக்குள்) அடிக்கப்பட்டது என்று சொல்லலாம். 1862-ம் வருஷ முத்திரை இருந்தபோதிலும், அது அந்த வருஷம் அடித்த ரூபாயாய் இருக்கவேண்டியதில்லை.

1853-ம் வருஷம் ரூபாய் இப்பொழுதும் இருக்கிறது. ஆனால் அதற்கு செலாவணி கிடையாது. ஆனால், அதை கர்ரென்ஸி ஆபீஸில் கொடுத்துவிட்டு, புது ரூபாய் வாங்கிக்கொள்ளலாம்.

கலியாணம் அல்லது விழாக் காலங்களை உத்தேசித்து விரும்பி, ஜனங்கள் தங்கள் சொந்த தங்கத்தையோ, வெள்ளியையோ, மிண்டில் கொண்டு போய்க் கொடுத்தால், சர்க்கார் நாணயங்கள் அடித்துக் கொடுத்தார்கள். ஆனால் அந்த வழக்கத்தை 1893-ம் வருஷத்திலிருந்து, சர்க்கார் நிறுத்திவிட்டார்கள்.

இப்பொழுதும் பான்ஸி (சித்திர) நாணயங்கள் மிண்டில் செய்துகொள்ளலாம், ஜனங்கள். ஆனால் ஜனங்களின் சொந்த தங்கம் அல்லது வெள்ளியைக் கொண்டுபோய்க் கொடுத்தால், மிண்ட் காரர்கள் செய்து கொடுக்க மாட்டார்கள். சர்க்கார் தங்கம் அல்லது வெள்ளிப் பாளங்களைக் கொண்டுபோய்க் கொடுக்க வேண்டும்.

1835-ம் வருஷத்துக்குப் பிறகு, 366 கோடி ரூபாய்கள் அடிக்கப்பட்டிருப்பதாக கணக்கு எடுக்கப்பட்டிருக்கிறது. இந்த ரூபாய்களை ஒரு தினுசு வரிசையாக அமைத்து வைத்தால், பூமியின் சுற்றளவைப் போல மூன்று பங்கு இருக்கும். ஒன்றின் மேல் ஒன்றை வைத்து அடுக்கினால், நன்னம்பிக்கை முனையிலிருந்து கெய்ரோ தூரம் இருக்கும். (ஆப்பிரிக்கா கண்டத்தின் நீள அளவாக இதைச் சொல்லலாம்.) அரையணா நாணயம் கடைசியாக அடிக்கப்பட்டது 1881-ம் வருஷத்தில். குஞ்சு அரைக்கால் ரூபாய், இப்பொழுது அதிகமாக, கண்ணில் காணோம்.

ஒளித்து வைத்திருந்த 1835-ம் வருஷத்து ரூபாய்களை பை பையாக ஜனங்கள் கொண்டு வந்து கொடுத்துவிட்டு, புதிய ரூபாய்களை வாங்கிக் கொண்டு போகிறார்கள். புதியதுக்கும் பழைய ரூபாய்க்கும் தாரதம்ய மதிப்புக் கழிக்கப்பட்டு, புதிய ரூபாய் கொடுக்கப்படுகிறது. கை புரளாமல் கட்டி வைக்கப்பட்டிருக்கும் ரூபாய் எடை குறைந்து போவதில்லை. இந்த ரூபாய்களுக்குச் சரிக்கு சரி கிடைக்கும்.

ரசாயன சாமான்களின் உதவியைக் கொண்டு, பலர் ரூபாய் நாணயத்திலிருந்து வெள்ளியைத் திருடி விடுகிறார்கள். பலர் ரூபாயில் ஓட்டை செய்து, வெள்ளியைத் திருடி விடுகிறார்கள். இந்தச் சில்லறை வெள்ளித் திருட்டினால், பலர் திருப்தி யடைவதில்லை. அவர்கள் கள்ள நாணயங்களும் உற்பத்தி செய்ய எத்தனிக்கிறார்கள்.

ஒரு நாணயம் கள்ள நாணயமா, உண்மையான நாணயமா என்று எளிதிலே கண்டுபிடிக்க முடிவதில்லை. நாணயத்தைத் தட்டிப் பார்ப்பதுதான் சுலபமான வழி எனக் கருதப்படுகிறது. கள்ள நாணயம் சத்தக் கட்டையா யிருக்கும். ஆனால் இதை நம்ப முடியாது. ஏனென்றால், சர்க்கார் மிண்டில் அடிக்கப்பட்ட உண்மையான நாணயங்களிற் சில, சத்தக் கட்டையாகத்தா னிருக்கின்றன. நாணயம் செய்யும் உலோகத்தில் சிறு தவறு ஏதேனும் ஏற்பட்டிருக்கலாம். அல்லது நாணயத்தில், கண்ணுக்குத் தெரியாத விரிசல் இருக்கலாம்.

கள்ள நாணயத்தின் ரங்கு சரியாய் இருக்காமலிருக்கலாம். செம்பு, ஈய நிறம் அதிகமாக இருக்கலாம். உலோகத்தை உருக்கி ஊற்றும்பொழுது, நாணயங்களின் விளிம்பு (வரம்பு) சரியாய் இல்லாமலிருக்கலாம். கள்ள நாணயங்களின் விளிம்புகள் கரடுமுரடாயிருக்கும். இதைக் கண்டு கொள்ளலாம். சில சமயங்களில், கள்ள நாணயங்களில், உருவமும் லக்கமும் சரியாக அமைவதில்லை. இவைகளை ஊன்றிக் கவனித்துப் பார்த்தால், கள்ள நாணயத்தைத் தெரிந்து கொள்ளலாம்.

வ. வே. சு. அய்யர் எழுதிய

குருகோவிந்த சிங்கன்

தபாற்கூலி யுள்பட 5 அணா ஸ்டாம்பு அனுப்பவும்.

பழிக்குப் பழி

ந. பிச்சமூர்த்தி எழுதியது

எங்கள் வருஷப் பிறப்பு தினம். மாலை நேரம். பகல் விருந்தின் கனத்தைக் குறைக்கவேண்டி இரண்டொரு மைலாவது நடந்துவிட்டு வரலாமென்று நாங்கள் கிளம்பினோம். புதுச்சாலை வழியாக ஏதேதோ பேசிக்கொண்டு, ரயில்வே ஸ்டேஷனை அடைந்தோம். நூற்றுக்கணக்கான எலிகளைக் கம்பிக் கூண்டுகளில் அடைத்து, கூடுகளைக் காவடிபோல் மூங்கில் கழியில் கட்டித் தொங்கவிட்டுக் கொண்டு தோட்டிகள் எடுத்துப் போகும் காட்சி தென்பட்டது. சங்குரு "நமது ஊரில்தான் பிளேக் வழக்கமில்லையே. இவைகளை எதற்காகக் கொண்டு போகிறார்கள்?" என்றான்.

"புவ்! உனக்குத் தெரியாதா? எலிகளுக்குப் பற்கள் அவ்வளவு கூர்மையாய் எப்படி இருக்கிறதென்று ஜெர்மன் தேசத்து விஞ்ஞானிகள் கண்டு பிடிக்கப் போகிறார்களாம். அதற்காக நம்முடைய தேசத்திலிருந்து எலிகள் ஏற்றுமதியாகிப் போகின்றன" என்று பதில் சொல்லிவிட்டு நண்பன் ராமு 'இடிஇடி' யென்று சிரித்தான்.

நண்பன் கிட்டு "டேய் ராமு! சங்குருவைப் பரிகாசம் செய்யாதே" என்று அவனைப் பார்த்துச் சொல்லிவிட்டு என் பக்கம் திரும்பினான். "நமது முனிஸிபாலிடியார் ஜனங்களுக்கு சௌகர்யம் செய்துகொடுக்க வேண்டிய கடமையை அனுசரித்து, இரண்டு வருஷங்களுக்குள் ஊரில் எலிப்பூண்டே இல்லாமல் அடிக்கப் போவதாக கங்கணம் கட்டிக்கொண்டிருக்கிறார்கள். எலி வேட்டைக்கென்று 1500 ரூபாய் அலாதியாகக் கட்டிப் போட்டு விட்டார்கள். ஒரு எலி பிடித்தால் காலணா கிடைக்கும். கூண்டு முனிஸிபாலிடியார் கொடுக்கிறார்கள். விஷயம் தெரிந்ததா?"

நான் "எப்படியாவது போகட்டும் முனிஸிபாலிடி எலிகள்! இந்த வயிற்றெலியின் கொடுமையைச் சொல்லு! இல்லாவிட்டால் இன்று சாப்பாடு வலுப்பானேன்?...........டேய்! தெரியாத்தனமாய் உலவப் புறப்பட்டுவிட்டேன். நடக்கக்கூட முடியவில்லை— வயிற்று வலி. அதோ கை காட்டி மரம் தெரிகிறதே, அதன்கீழே இருக்கும் பாலத்தில் உட்காருவோம். உட்காருவோமா?"

நண்பர்களுக்கு என்மீது இரக்கம் வந்துவிட்டது. எலிப்பேச்சை அப்படியே விட்டுவிட்டு மௌனமாய் நடந்துவந்தார்கள். குறிப்பிட்ட பாலத்தண்டை வந்ததும் எல்லோரும் உட்கார்ந்தோம்.

மேற்கு வானில், மரங்களின் பின்னால் கொல்லன் உலைபோல் பரிதியின் நெருப்புக் கொதித்துக் கொண்டிருந்தது. சம்மட்டி எடுத்து அடித்தாற் போல் செம்பொன் கிரணங்கள் கிழக்கு நோக்கிப் பறந்தன.

தென்னையின் ஊர்த்வ ஜடைகளிலெல்லாம் தீ. அந்த சிவப்புச் சித்திரத்திற்குப் பகைப்புலம் போல் பசும் வயல்களும், மரங்களும் சவுக்கைத் தோப்பும் அமைந்திருந்தன.

அக்காட்சியைக் கண்டு என் மனம் சற்று சாந்தி அடைந்தது. உடலுக்குக் கொஞ்சம் லகுத்வமும் உற்சாகமும் வந்தது. இப்படிச் சற்று நேரம் ஆனந்தமாய்க் கழிந்திருக்கும். 'டப்' 'டப்' என்று இரண்டொரு நிமிஷங்களுக்கொரு முறை துப்பாக்கிப் பிரயோகம் செய்யும் சப்தம் கேட்டது. "ராத்ரி விருந்துக்கு மடையான்கள் சுடுகிறார்கள் போலிருக்கிறது" என்று முன் யோசனையில்லாமல் சொன்னான் ராமு.

"போடா மடையா. போலீஸ்காரர்கள் துப்பாக்கிப் பழக்கிக்கொள்கிறார்கள், தெரியவில்லையா? மடையான்களுக்குக்கூட மூளையுண்டு. முதல் வெடி சப்தம் கேட்டதும் எல்லாம் பறந்துவிடாதா?" என்று மறுத்துப் பேசினான் கிட்டு.

இவ்விதமாய் நண்பர்கள் தர்க்கித்துக் கொண்டிருக்குங்கால், சப்தம் வந்த திக்கிலிருந்து இரண்டு மூன்று குடியானவர்கள் வரப்புகளின் வழியாய் வந்து கொண்டிருந்தனர். அக்குடியானவர்களை நோக்கி "என்ன அப்பா அங்கே?" என்றேன். அதே சமயத்தில், காற்றுவாக்கில் 'வாள்' 'வாள்' என்று நாய்களின் குரலோசை தெளிவாய்க் கேட்டது. "அந்த இடத்திலெ முனிசிபாலிடியாரு நாய்களைச் சுட்டுத் தள்ராங்க" என்றான் ஒரு குடியானவன்.

"சிவ, சிவ! எலி ஏற்றுமதியாயிற்று! இப்பொழுது நாய்க் கொலையா? போதும் போதும்! கிளம்புங்கள் இந்த இடத்தைவிட்டு. நாகரிகத்தின் பைத்யக்காரச் சேஷ்டைகள் முடிவடையும் சுடலைக்கு அருகிலாவது சென்று சற்று மௌனத்தை மணப்போம்." என்று அலுப்புடன் எழுந்திருந்தேன்.

நண்பர்களும் எழுந்திருந்தனர். மெதுவாய் அரை மைலில் சுமார் நடந்து சென்று அல்லிக் குளத்

தண்டை தங்கினோம். புல் தரையின் மீது சொஸ்தமாய்ப் படுத்துக்கொண்டேன். 'வெல் வெட் மெத்தையின் சுகம் எம்மட்டு'.

எங்களுக்கு எதிர்க்கரையில் சண்பக மரமொன்றிருந்தது. புஷ்பம் பறித்து வருகிறேனென்று ராமு எழுந்திருந்து போய் விட்டான். அவனுடைய உருவம் குளக்கரையின் வலது புறமிருந்த ஒரு கட்டிடத்தின் பின் மறைந்துவிட்டது.

இக்கட்டிடம் போவோர் வருவோரையெல்லாம் 'உள்ளே வாருங்கள்' என்று அழைப்பது போன்ற நவீனத்துடனும் அழகுடனும் விளங்கிற்று. கண்ணாடிக் கதவுகளும், அடக்கமான பச்சை வர்ண சுண்ணாம்புப் பூச்சும் கட்டிடம் சமீபத்தில் கட்டப்பட்டதென்பதை எளிதில் விளக்கிற்று. வெகு நாளாக இந்த திக்கில் வராததால் எப்பொழுது கட்டப்பட்டதென்று தெரியாது. அக்கட்டிடத்தைப் பார்க்கவேண்டுமென்ற அவாவும், அங்கே போவானேன் என்ற அகாரணமான பயமும் உண்டாயிற்று. அப்படியே குளக்கரையில் தனிமையின் இன்பத்தைப் பருகிக்கொண்டிருந்தோம்.

சிறிது நேரம் சென்றது. வான வெளியில் வெள்ளிக் கிண்ணிபோல் சந்திரன் தென்பட்டான். மங்கிய வெள்ளி வலை வீசி உலகை மயக்கினான். 'மயக்கினான்' என்ற பதம்கூட பொருந்தாது. அன்றைய தினத்தில் பிறந்த உணர்ச்சியைக் குறிப்பிட எனக்கு வார்த்தை தெரியவில்லை. சந்திரனையும், அதன் சாம்பலொளியால் சுலுக்கிட்டுச் சூழப்பட்ட அக்குளத்தையும், வெள்ளை அல்லிகளின் பாம்புத் தலையையும் பார்க்கப் பார்க்க ஏதோ பெயரில்லாத் திகிலும் நடுக்கமும் உண்டாயிற்று. ஏதோ பிசாசை ஓட்டுவதுபோல் சந்துரு சிட்டி அடித்தான்.

நாழியாயிற்று. புஷ்பம் பறிக்கச் சென்ற ராமு திரும்பி வரவில்லை. நான் போய்ப் பார்த்து வருகிறேனென்று கிட்டுவும் கிளம்பிவிட்டான். நான் பாட்டுக்குப் படுத்திருந்தேன். சந்துரு சிட்டி யடிப்பதைவிட்டுவிட்டு இரைந்து ராகம் இழுக்க ஆரம்பித்தான். பிறகு அதையும் நிறுத்திவிட்டு "நானும் பார்த்து வருகிறேன்" என்று போய் விட்டான்.

என்ன காரணத்தாலோ சந்துரு போன பிறகு வானம் மாறுதலடைந்துவிட்டது. சந்திரனுடைய முகக்களை மாறி முக்காடிட்டு அழும் முகம்போலாகிவிட்டது. பின்னும் சிறிது நேரத்திற்கெல்லாம் எருமைக் கூட்டம் குளத்தில் இறங்குவதுபோல் கறுப்பு மேகங்கள் வானில் விரைந்து வந்து கூடின. மேகங்கள் சந்திரனைத் திரையிட்டதால் சந்திரனுடைய அழுகை முகம் மாறி சவக்களை பிறந்தது. மௌனமாய்ச் செல்லும் கிருஸ்துவ சவக்காட்சி என் நினைவுக்கு வந்தது.

ஒன்றும் தோன்றாமல் குளத்தின் அக்கரையைப் பார்த்தேன். வாயு பகவான் மரங்களுக்கிடையில் கட்டி விழுந்த குழந்தைகள்போல் சிணுங்கிக் கொண்டிருந்தான். தரைமீது, ஐப்பானியர் சாப்பிடும் பாம்புமுதல் வெள்ளையர் சாப்பிடும் மான் வரையிலும், தவளை முதல் பன்றி வரையிலுமுள்ள ஒவ்வொரு ஜந்துக்களின் எறும்புக் கூடுகளும் வரிசை வரிசையாய்ப் போய்க் கொண்டிருந்தன. போதாக்குறைக்கு எட்டிய புதர்களினின்று நரிகளின் ஊளை கிளம்பி படிப்படியாய் குறைந்து கொண்டிருந்தது. சண்பக மரத்தினின்று இரண்டு ஆந்தைகள் கோரமாக உலகு நடுங்கும்படி 'கராமுரா' எனக் கத்தின. பிறகு ஒரு நிமிஷம் நிசப்தம்.

எனக்கு படுத்திருக்க முடியவில்லை. வெளியே இயற்கையின் பயங்கரமான காட்சி. உள்ளத்தில், போன நண்பர்கள் திரும்பி வரவில்லையே என்ற பேரச்சம். வெளி பயம், உள் பயம் இரண்டையும் தப்பி ஓடுவதை உத்தேசித்து நானும் அவர்களைத் தேடப் புறப்பட்டேன். கூண்டோடு கைலாசமென்றாலும் தோழமை யிருக்கிறதல்லவா என்ற எண்ணம்!

குளத்தின் வலப்புறமாய், கட்டிடத்தைத் தாண்டி சண்பக மரத்தடிக்குப் போனேன். ஒருவரையும் காணோம். அங்கு மிங்கும் அலைந்து பார்த்தேன். பயனில்லை. கடைசியாக, கட்டிடத்தில் வேண்டுமானால் பார்க்கலாமென்று திரும்பி வந்தேன். கட்டிடத்திற்குள் நுழைந்தேன். உள் வாசற்படி போகுமளவும் மனித அரவத்தையே காணோம். வாசற்படிக்குமேல், நெருப்பெழுத்தில் "விஞ்ஞான மந்திரம்" என்று எழுதப்பட்டிருந்தது. நிலையைத் தாண்டினேன். முற்றத்தினோரத்தில், ஜலம் நிரம்பிய சிமிண்ட் தொட்டி ஒன்று இருந்தது. அருகில் கடப்பைக்கல் மேடை. அதன் பேரில் ஒரு பெரிய ஹம்ஸம் (அதை வாத்தென்று வர்ணித்தல் பிசகு). சிறகுகளைக் கோதிக்கொண்டிருந்தது.

யாரோ பணக்காரர் கோடை வசதி போலும் என்று நினைத்துக்கொண்டு கூடத்தை நோக்கிச் சென்றேன். ஏககாலத்தில் அச்சத்தையும் விந்தையையும் உண்டாக்கும் காட்சி. எதிரே தஞ்சாவூர் சிவகங்கைத் தோட்டத்தின் சுவர் போன்ற அகலமும் உறுதியும் கொண்ட சுவர். அதில் இரண்டு பிரமாண்டமான ஜன்னல்கள். ஜன்னல்களுக்குக் கண்ணாடிக் கதவுகள் உள்புறத்தில் போடப்பட்டிருந்தது.

ஒரு ஜன்னலண்டை ராமு உட்கார்ந்திருந்தான். அவனுக்கு சிறிது தூரத்திற்கப்பால், நகசிகை பரியந்தம் ராமுவைப்போலவே மற்றொரு நிழலுருவம் நின்றுகொண்டிருந்தது. அவ்வுருவின் தலையில் ஜ்வர எழுத்துக்களால் மனச்சாட்சி என்று எழுதியிருந்தது. அந்த இடத்தில் அறிமுகமில்லாத பின்னும் பல விசித்திரமான உருவங்கள் இருந்தன. ஆனால் எல்லாவற்றிற்கும் விழிகள் பெரியனவாகவும், உலகின் ரகசியங்களை எப்படியாவது கண்டுபிடிக்க வேண்டுமென்ற ஆர்வத்தைத் தோற்றுவதாயும் இருந்தன.

"ஏய் ராமு! நல்ல காரியம் செய்தாய் வீடுபோக வேண்டாமா? இங்கே வந்து தமாஷ் பார்த்துக்கொண்டிருக்கிறாயே" என்றேன்.

ராமு பதில் சொல்லவில்லை. சற்று நெருங்கிப் போய் பார்க்கலாமென நகர்ந்தேன். விந்தையிலும் விந்தை! ராமுவினுடைய மேல் மண்டை வெற்றிலைப் பெட்டிபோல் திறந்து வைக்கப்பட்டிருந்தது. ஆனால் ரத்த தாதுவின் கோரமே கண்ணில் படவில்லை. அவனுடைய முகம் கொஞ்சமேனும் உயிரின்களையை இழக்கவில்லை.

பக்கத்தில் நின்றுக் கொண்டிருந்த உருவங்கள் இரண்டு நிமிஷத்திற் கொருதரம், மூன்று நிமிஷத்திற் கொருதரம். ஏதோ வைர ஊசி போல், ஜோதிக் கம்பி போல் சில கருவிகளை ராமுவின் மூளைக்குள் விடுவதும் காதில் விடுவதும் எடுப்பதுமா யிருந்தன. அப்படிச் செய்யும் பொழுதெல்லாம் ஐம்புலன்களி லொன்றுவது, பொறிகளி லொன்றுவது சேஷ்டித்தன. அவற்றையெல்லாம் அந்த உருவங்கள் ஏதோ நோட் புஸ்தகத்தில் பதிந்து கொண்

டன். நிழல் ராமு நிஸ்திராணியாய் பக்கத்தில் நின்று கொண்டிருந்தான்.

எனக்கு ஆயிரம் தலை கொண்ட திகைப் பெழுந்தது. "இதற்குப் பெயரா நரகம்? இங்கா இருக்கிறது?" என்று நினைத்துக் கொண்டே "டேய் ராமு! இது என்னடா காரியம்? உணர்ச்சி இல்லையா உனக்கு?" என்று கூச்சலிட்டேன். நிழல் ராமு இடது கையால் வாயைப் பொத்திக் கொண்டு, வலது கையால் ஹம்ச பட்சியைச் சுட்டிக் காட்டினான்.

இவ்வளவு திகில்களுக் கிடையிலும் எனக் கொரு ஞாபகம் வந்தது. "இது ராமுவின் கதி. கிட்டுவின் செய்தி என்ன?" என்று மொண மொணத்துக் கொண்டே திரும்பினேன்.

இரண்டாம் கட்டு முற்றம் தெரிந்தது. அங்கு போய்ச் சேர்ந்தேன். அங்கும் பயங்கரமான வடிவங்கள். ஒன்றுக்காவது கடுகளவு கூடச்சதை கிடையாது. வெறும் எலும்புக் கூடுகள். ஆனால் அவைகளுக்கு உயிர் மட்டும் இருந்தன. அதெப்படி முடியுமென்றால் எனக்கு மட்டும் எப்படித் தெரியும்? அவைகள் அங்கு மிங்கும் நடந்து சென்ற பொழுது அவைகளின் எலும்புகள் ஒன்றுக் கொன்று உராய்ந்து பன மட்டைபோல் சத்தம் செய்தன.

அக் கூட்டத்தின் நடுவில், ஒரு பெரிய மேஜையின் பேரில் கிட்டு படுத்துக் கொண்டிருந்தான். அவனது கால் கைகள் ஒருவிதப் பசையால் ஒட்டப் பட்டிருந்தன. அவனுக்கு நேர் மேலே, பத்தடி உயரத்தில், துத்திநாகத் தகட்டால் செய்த ஏழு மூலைத் தொட்டி ஒன்று தொங்கிக் கொண்டிருந்தது. அத் தொட்டியின் அடிப்புறத்தில் ஏழு குழாய்கள் இருந்தன. அவைகளினின்று கிட்டுவின் மீது வான வில்லின் வர்ணம் கொண்ட திராவகங்கள் சொட்டிக் கொண்டிருந்தன. அந்தத் திராவகங்கள் விழுந்த இடத்தில் தீப்பற்றி எரிந்தாற் போல் இருந்திருக்கும். இல்லா விட்டால் அவன் முகம் அவ்வளவு யம வேதனைப் படுமா? இங்கும் அப்பயங்கர வடிவங்கள் ஏதோ நோட் புஸ்தகத்தில் குறித்துக் கொண்டிருந்தன.

"இதென்ன இந்திர ஜாலமா?" என்று கேட்டுக் கொண்டே மேஜை அருகில் சென்றேன். "கிட்டு! நீ என்ன பிணமாகி விட்டாயா? எழுந் திருடா மூடா" என்று கத்தினேன். என் ஹிருதயத்தை ஊடுருவிச் செல்லும் துயர விழிகளோடு கிட்டு பார்ப்பதைப் பார்த்து சுற்றி யிருந்த உருவங்கள் பல்லிளித்துக் கை கொட்டின. இலையுதிர் காலத்துச் சரகுகள் காற்றில் சுழலும் சப்தம் கேட்டது.

என்னுடைய மன நிலைமையைப் படம் பிடிக்க வார்த்தை தெரிய வில்லை. என் கண்களினின்று ஜலம் வந்து வாயோரத்தில் விழுந்து உப்புக் கரித்தது. எக்கேடு கெட்டுப் போகட்டும் ராமுவும் கிட்டுவும் சந்துருவும். நான் தப்பினால் போது மென்று வாசற் பக்கம் ஓட்டம் பிடித்தேன். முதற் கட்டு உள் வாசல் நிலைபண்டை வந்ததும் நெஞ்சு 'பக்'கென்று தீப் பிடித்துக் கொண்டது. காரணம், ஹம்ச பக்ஷி விஸ்வ ரூபம் எடுத்துக் கொண்டு வழி மறைத்திருந்தது தான்.

என் தலை சுழன்றது. கண்களில் நக்ஷத்திரங்கள் பறந்தன. நெற்றியிலும் முகத்திலும் வியர்வைத் துளிகள். வாயின் கூரையில் நாக்கு ஒட்டிக் கொண்டது. அப்படியே ஐயனார் கோவில் யானை குதிரைகளுக் கிடையில் நிற்கும் கல்லுருவ வீரனைப் போல் சமைந்து போனேன். "வருஷப் பிறப்பும் அதுவுமாய் வீடு போய்ச் சேர்வேனா? அல்லது என் உயிருக்கே வருஷம் முடிந்து விட்டதோ? அப்படி யென்றால், ஒவ்வொரு வருஷமும் வருஷப் பிறப்பன்று எனக்குச் சிராத்தம் என்பது வெகு அமங்கலமா யிருக்குமே? செத்துத் தொலைவதிலும் நல்ல நாள் பார்த்துத்தானா உயிரை விட வேண்டும்?" என்ற தினுசில் எண்ணங்கள் ஓடிக் கொண்டிருந்தன.

"அஹிம்ஸா விருதக்காரரே! வேடிக்கை பார்த்தாயிற்றா?" என்று என்னைக் கேட்டது ஹம்ஸம்.

"போதும் போது மென்றாகி விட்டது. இதோ வீட்டுக்குப் போகிறேன்" என்று வெகு சாதுர்யமாய் பதில் சொன்னேன்.

"அண்ணே! இன்னும் பார்க்க வேண்டியது கொஞ்சம் பாக்கி இருக்கிறது. இதைச் சாப்பிடு, தைரியம் வரும். பிறகு வேடிக்கைப் பார்க்கலாம்" என்று ஏதோ மருந்தைக் கொடுத்தது.

அதைத் தட்டிச் சொல்ல எனக்குச் சக்தி இல்லை. மருந்தை வாங்கி வாயில் போட்டுக் கொண்டேன். பத்து நிமிஷத்திற்குள் உடலினுள் ஒரு பெரிய நெருப்பு வெள்ளம் பரவியது. மேலே பட்ட காற்று பனிக் கட்டி போலும் தணலின் காங்கை போலும் மாறி மாறி உணர்ச்சி தந்தது. கண்களிரண்டும் நெட்டிபோல் மிதந்தன. முற்றத்தின் வழியாய்ப் பார்த்தேன். சவுக்கைக் கட்டையை உளி வைத்து உடைப்பது போன்ற சப்த மொன்று மார்பினுள் கேட்டது. அது மட்டுமா? அச் சப்தம் தொடர்ச்சியாகவும், தாளத்திற்கு ஒருவாறு ஒத்ததாகவு மிருந்தது. பிறகு, போகப் போக, முஸ்லீம்களின் கல்யாண வரிசை போன்ற ஓயாத முடிவற்ற ஊர்வலமாகி விட்டது அவ்வொலி. அதிலும் விசித்திரம், ஒலியின் ஸ்தாயி உயர்ந்துகொண்டே போய், மார்பு வெடித்துவிடும் போன்ற வரையைத் தொட்டதுதான்.

அட கடவுளே! இது என்ன கஷ்டம்? என்னையும் கூடவா ஹம்ஸம் வசப்படுத்தி விட்டதென்று பயந்தேன். திரை தள்ளியது போல் ஒலி மறைந்தது. என் உடலும் உயிரும் பிரிந்தன; சிவனும் அவருடைய வாகனம் நந்தியும் அலாதியானார். பக்கத்தில் ஒரு உருவம் நின்றது. பார்த்தேன். என் நிழலுருவம்!

"மயங்காதே. தெருப்புறம் போவோம் வா" என்றது ஹம்ஸம்.

ஹம்ஸம் முன்னே செல்ல நான் பின் தொடர்ந்தேன். முன்போலவே, வானில் சந்திரனைப் பாடையி லிட்டதுபோலிருந்தது. எங்கோ ஒரு மரத்தினின்று ஒரு பக்ஷி "ஐயோ, ஐயோ" என்று அலறிக்கொண் டிருந்தது.

என்னைச் சுற்றிலும் ஒரே கூட்டம். குஸ்திச் சண்டை பார்க்க வந்திருப்பவர்கள்போல், ஏராளமான எலும்புக் கூடுகள். சீவீருக்குப் போன்ற அவ்வெலும்புகளின் மீது சந்திரனுடைய மங்கிய ஒளி விழுவதும், அவைகளின் விழிப் பொந்துகள் என்னைப் பார்ப்பதும் மிகக் கோர நாடகமாயிருந்தது.

வலதுகைப்புறத்தில், பத்தடி தள்ளி, சந்துருவின் தாயார் நின்றுகொண்டிருந்தாள். அவளுக்குக் காசரோகம். பக்கத்தில் பைத்தியக்காரன் பஞ்சு நின்றுகொண் டிருந்தான். இருவரும் கைகால் அசைக்கவில்லை. இவர்களுக் கெதிரில், இடது கைப்புறத்தில், ஒரு கன்றுக்குட்டியின் எலும்புக்கூடும் ஒரு நாயினுடைய எலும்புக்கூடும்; துப்பாக்

கியும் கையுமாய் நின்றன. எனக்கு ஒருதரம் சோகப்போட்டது.

அப்பொழுது, "அந்திய காலத்தில் உங்களுக்கேதாவது விருப்ப மிருந்தால் தெரிவிக்கலாம்" என்று ஹம்ஸம் தெரிவித்தது. மரண தண்டனை அடைந்தவர்களைக் கேட்பது போன்ற அந்தக் கேள்வி எனக்குச் சிரிப்பை மூட்டியது. எலும்புக்கூடுகளெல்லாம் ஒரே மனதாய் "ஆச்சோ பாங்கா" ஒருதரம் தட்ட வேண்டுமென்று சொன்னது எனக்கு எமாற்றத்தைத் அளித்தது.

மறு நிமிஷத்தில் அவ்வுருவங்கள் "முக்தி நெறி யறியாத" என்ற மெட்டில் பாடிக்கொண்டு, கைகொட்டி குற்றவாளிகளைச் சுற்றிவர ஆரம்பித்தன. பாட்டு என்ன தெரியுமா?

பல்லவி

ஐயையோ! மூடர்களே!
மூடர்காஅள் ஐயையோ!....

அனுபல்லவி

வாயில்லாப் பிராணிகளை
வதை செய்யும் வெறும் வீணர்களே!
தாயில்லாத் தவளைகளை
தவிக்கச் செய்யும் விஞ்ஞானிகளே!
கோயிலுள்ளான் படைப்பித்த
பட்சிகளை, விலங்குகளை,
படிப்பிற்கும் சுகத்திற்கும்
துன்புறுத்தச் சொன்னவராரோ?
(ஐயையோ)

பாடும் பொழுதெல்லாம் என் ஈரல்க் குலை நடுங்கிற்று. பாட்டும் கூத்தும் முடிந்தது. கன்றுக்குட்டியைப் பார்த்து ஹம்ஸம் கேட்டது. "உனக்கு சீக்கு வந்து, நீ நாறும் தோலுமாயிருந்த பொழுது, வியாதியின் கொடுமையால் துன்பப்படக் கூடாதென்று கருணையுடன் உன்னைப் புலையர் வசம் ஒப்புவித்து விடுதலை யளித்த புண்யவதி யார், தெரியுமா?" "ஓ! அதோ நிற்கிறாளே அவள்" என்று சந்துருவின் தாயாரைக் குறிப்பிட்டது கன்றுக்குட்டி.

"சரி. இப்பொழுது அவளுக்குக் காசரோகம். இரண்டு மாதமாய் நரக வேதனைப் படுகிறாள். தம்பி! நீண்ட நாள் வியாதியில் தொல்லைப்படுவது கண்ட்ராவி. அவளுக்குச் சிவ சாமீப்யம் அனுக்ரஹம் செய்' என்று உத்திர விட்டது ஹம்ஸம்.

சந்துருவின் தாயார் "ஹம்ஸமே! நான் தானாகவே செத்துப் போகிறேன். தங்கம் போன்ற குழந்தைகளையும் பேரன் பேத்திகளையும் திடீரென்று விட்டுவிட்டுப் போக இஷ்டமில்லை. சீக்கு சகஜம்தானே" என்று சொல்லி முடிப்பதற்குள் கன்றுக்குட்டி 'டப்'பென்று அவளைச் சுட்டு வீழ்த்தியது.

அடுத்தாற்போல் ஹம்ஸம் நாயின் கூட்டைப் பார்த்து, "ஏப்ரல் மாதத்தில் உனக்குப் பைத்தியம் பிடித்து விடப் போகிறதே என்று பயந்து, உன்னையும் உன் கோஷ்டியாரையும் சுட்டுக் காப்பாற்றும்படி ஏற்பாடு செய்த பிரபு யார் தெரியுமா?" என்று கேட்டது.

நாயின் எலும்புக்கூடு பதிலளிக்காமல், மாஜி முனிசிபல் கவுன்சிலரான பைத்யக்காரப் பஞ்சுவை சுட்டிக் காட்டிற்று.

"பேஷ்! இப்பொழுது அவருக்கு பைத்யமே பிடித்துவிட்டது. பைத்யங்களை இப்படி விடக்கூடாதல்லவா?" என்று ஹம்ஸ பக்ஷி சொல்லிக்கொண்டிருக்கும் போதே பைத்யக்காரப் பஞ்சு நாய்க்கூடால் 'டப்'பென்று சுடப்பட்டான்.

எனக்கொரு அசட்டுத் தைரியம் பிறந்தது—எனக்கென்றால் என நிழலுருவத்திற்கு! கம்பீரமாய் நழுவ எத்தனித்தேன். ஹம்ஸம் என் ஸ்தூல தேகத்தைப் பார்த்து "நீதான் பாக்கி" என்று சொல்லி கண் சிமிட்டிற்று. உடல் மூர்ச்சை யடைந்தது. என் நிழலுருவுக்குப் பிரமாத கோபம் வந்து விட்டது. "பிராணிகளுக்கு என்னால் யாதொரு கெடுதியும் எப்பொழுதும் செய்யப்பட்டதில்லையே" என்றது.

ஹம்ஸம்:—நீயா யிருந்தாலென்ன? உன் இனத்தவரா யிருந்தாலென்ன? எல்லோரும் வாயில்லா ஜீவன்களுக்கு எமனாகத் தலைப்பட்டிருக்கிறீர்கள்.......

நான்:—இது தெய்வத்திற்கு அடுக்குமா? இந்தத் தடவை மன்னித்து விடு. அஹிம்ஸையை நிலை நாட்டுகிறேனா இல்லையா பார். இது சத்யம் தயை செய்.

ஹம்ஸம்:—பேசாதே இந்தப்பாட்டு எவ்வளவு தரம் எவ்வளவு பெயரிடம் கேட்டிருக்கிறேன்! கண் பஞ்சடையு முன்னே கடவுளை நினைத்துக் கொள். கர்மாவை வேண்டுமென்றால் சபித்துப் பார். ஹூம், ஜல்தி.

என்னை யறியாமலே "ஏ உடலமே!" என்று கூவினேன். என் உடலுக்குள் நிழலுருவம் புகுந்துகொண்டு விட்டது. ஹம்ஸத்தைப் பார்த்தேன். அதுவும் மாறியிருந்தது. ஹம்ஸத்தின் உருவம் மாறி அன்புத் தெய்வத்தின் உருவம் நின்றது. எனக்குப் புத்துயிரும், தைரியமும், தெளிவும் பிறந்தது.

சமயத்தில் தடதடவென்று ஒரு ஆட்டின் எலும்புக் கூடு வேகமாய் கூட்டத்திற்குள் ஓடி வந்தது. அன்பு தெய்வத்திடம் ஏதோ முறையிட்டது. என்னைப் பார்த்து "நண்பரே! அன்புப் பெருக்கினால் வெறும் மண்ணைப் பூம்பொழிலும் பொன் வயலுமாக்கும் காவேரி தேவியின் கரையில், இன்று செய்த யாகத்தில், எனக்கு இதோ மோக்ஷம் கொடுத்திருக்கிறார்கள். விடுதலை யடைந்ததும் இங்கே வந்திருக்கிறேன். ஏய்! மானிடா! உனக்கு நான் மோக்ஷ வழி காட்டுகிறேன். உனக்கு எது பிடித்தம்—துப்பாக்கியா? மின்சார நாற்காலியா? தூக்கு மரமா?" என்று வெகு விமரிசையாய்ப் பேசிற்று.

இக்கேள்விக்குப் பதில் சொல்லும் மனிதன் உண்டா? என் அருமை மனைவியையும், குழந்தையும், பெற்றோர்களையும், சகோதர சகோதரிகளையும் நினைந்து என் உள்ளம் தவித்தது.

"ஒன்று..............இரண்டு" என்ற வார்த்தைகள் என் உள்ளத்தை வலுவுடன் வந்திழுத்தன. "மூன்று" என்ற சப்தம் கேட்டது. துப்பாக்கி 'டப்' பென்றது. "ஐயோ என்றலறி விழுந்தேன்.............

"அப்பா டேய்! பரிக்ஷைக்கு படிக்கிற லக்ஷணம் அழகாயிருக்கு!" என்ற பேச்சு செத்தவனை பிழைப்பு மூட்டிற்று. கண் விழித்தேன். ஹம்ஸமா கூட்டமா ஒன்றையும் காணோம். தமையனுடைய கோபவிழி மட்டும் தென்பட்டது. ஹரிகேன் விளக்கின் செஞ்சுடர் மலர் போல் விரிந்து நின்றது. ஸைகாலஜி புஸ்தகம் பிரித்தபடி கிடந்தது. தலை வைத்துத் தூங்கியதால் மரத்திருந்த விரல்களைப் பிசைந்து கொண்டேன். தெரு முச்சந்தியிலிருந்து நாய்களின் ஊளை யமனை அழைத்துக் கொண்டிருந்தது.

ஐயையோ! மூடர்களே
மூடர்காஅள்! ஐயையோ!

என்ற பல்லவி இன்னும் என் உள்ளத்தை விட்ட பாடில்லை. என்ன செய்வேன்?

"இன்றைக்கில்லை நாளைக்கு"

'இன்றைக்கில்லை நாளைக்கென்பது இல்லையென்பதற் கடையாளம்' என்பது பழமொழி. "இனிமேல் இந்தியன் ஸிவில் சர்விஸில் இந்தியர்களையே அதிகம் சேர்ப்பது பற்றி கட்டாயம் கவனிப்போம்" என்று அதிகார வர்க்கம் சொல்கின்றது. இந்தியாவின் ஒவ்வொரு ஜில்லாவின் தலைமையிலும் ஒரு சக்கரவர்த்தி இருக்கின்றான். அவனுக்குத்தான் கலெக்டர் என்று பெயர். ஐ ஸி. எஸ், கூட்டத்தைச் (இந்தியன் ஸிவில் ஸர்விஸைச்) சேர்ந்தவன். இந்திய துரைத்தன இலாக்காக்களின் நுட்பமான அதிகாரங்களெல்லாம் ஐ. ஸி. எஸ். கூட்டத்தின் கைகளிலேயே இருந்துவருகிறது. ஆகவே ஐ. ஸி. எஸ். படையில் எப்போதும் வெள்ளைக்காரர்களை அதிகமாக வைத்துக்கொள்வது தான் பிரிட்டிஷார் செய்துவரும் சூழ்ச்சி. இந்தியன் ஸிவில் சர்விஸ் என்றால் இந்தியர்களுக்கு அதில் அதிகம் இடம் இல்லை என்று அர்த்தம் போலும். கணக்கைக் கவனிப்போம்.

1911ம் ௵த்தில் ஐ.ஸி.எஸ். படையில் 1300 பேர் இருந்தார்கள். அதில் 64 பேர்தான் இந்தியர்கள். 'இந்த மாதிரி பட்சபாதம் பாராட்டக் கூடாது; இந்தியர்களுக்கும் அந்த கோஷ்டியில் இடந்தர வேண்டு'மென பலமான கூச்சல்கள் போடப்பட்டன. அழுகிற குழந்தைக்கு அழுக வாழைப் பழம் தரும் சமத்து பிரிட்டிஷாரிடம் அதிகம். ஆகவே இந்தியர்களில் ஏதோ சில ஸலாம்காரர்களைப் பொறுக்கி ஐ. ஸி. எஸ். கோஷ்டியில் சேர்த்துக் கொண்டார்கள். 1932ம் ௵த்தில் 1177 ஐ. ஸி. எஸ். காரர்களில் 368 பேர் இந்தியரா யிருந்தனர். இந்தியன் ஸிவில் ஸர்விஸைப்பற்றி ஆராய்ந்து லீ கமிஷன் ஓர் அறிக்கை தயாரித்தது. அந்த அறிக்கையிலும், "ஐ. ஸி. எஸ். கோஷ்டியில் பாதியளவு இந்தியர்களே இருக்கவேண்டும்" என்று சிபார்சு செய்யப்பட்டிருக்கிறது. ஆனால் இதை ஒரு சிபார்சாக உண்மையான இந்தியர் யாரும் மதிக்கவில்லை. இதைக் கூடச் செய்வதற்கு சர்க்கார் தீவிர முயற்சிகள் எடுத்துக் கொள்வதாகத் தோன்றவில்லை.

இந்தியர்களுக்கு இந்த சர்க்காரின் கீழ் உத்தியோகங்கள் கிடைப்பதை விட கிடைக்காதிருப்பதே நல்லது என நினைப்பவர் நாம்! ஆயினும் ஐ.ஸி.எஸ். என்ற ஏகாதிபத்திய முதுகெலும்புப் படையில் வெள்ளைக்காரர்களையே பெரும்பான்மையில் வைத்திருக்கவேண்டும் என பிரிட்டிஷார் கையாண்டுவரும் இரகஸ்யத்தை உடைத்துக் காட்டுவதற்காகத் தான் எழுத நேர்ந்தது. வாயினால் சொல்கிறார்களேயன்றி மனதார ஒரு நாளும் ஐ.ஸி.எஸ். கோஷ்டியை பிரிட்டிஷார் இந்திய மயமாகப் போவதில்லை, இது நிச்சயம்.

"நோகாது அடித்தேன்"

இந்தக் கதை அநேகருக்குத் தெரிந்ததுதான். ஓர் வீட்டுக்கு மூன்றாவது ஆள் ஒருவன் வந்து சேர்ந்தான். அவனுக்குச் சோறுபோட வீட்டிலிருந்த புருஷனுக்கு இஷ்டமில்லை. ஆகவே "என் பெண்டாட்டிக்கு உடம்பு சரியாயில்லை." "இந்த ஊர் ஹோட்டலில் சாப்பாடு வெகு பேஷ்" என்று ஏதேதோ சொல்லி மூன்றாமவனை வீட்டைவிட்டு அனுப்ப சூழ்ச்சிப் பேச்சுப் பேசினான். ஆனால் வந்தவனோ போவதாகத் தோன்றவில்லை.

ஆகவே வீட்டுக்காரன் பிறகொரு சூழ்ச்சி செய்தான். தன் மனைவியிடத்தில் சென்று "நான் அடிக்கிறாப் போல அடிக்கிறேன். நீ அழுகிறாப் போல அழு" என்று தந்திரம் சொல்லிக் கொடுத்தான். உள்ளே பொத்து பொத்து என்ற சப்தமும் ஐயோ ஐயோ என்ற ஓலமும் அடுத்த நிமிஷத்தினின்று கேட்டது. சிறிது நேரம் கழித்து புருஷன் ஒரு பிரம்புடன் வெளியே வந்து, "பாருங்கோ ஸார்! இந்தக் கழுதையை. பெண்டாட்டி புருஷன் சொன்னதைக் கேட்கவேண்டாமா?" என்றான். "அப்படியானால் நான் இன்றைக்கு ஹோட்டலுக்குப் போகிறேன்" என்று மூன்றாவது மனிதன் தெருவை நோக்கி போக்குக் காட்டினான்.

அரைமணி நேரம் கழித்து வீட்டில் ஒரு அழகான காட்சி நடைபெற்றது. "அடியே! அந்தப் பயல் நமது நாடகத்தை நிசமென நினைத்து ஓடியே போய்விட்டான். நான் உன்னை நோகாமல் அடித்தேனல்லவா?" என்று கேட்டான்.

"நான் ஓயாது அழுதேனல்லவா?" என்று மனைவியும் சிரித்தாள். திடீரென்று அடுத்திருந்த அறையின் கதவைத் திறந்து கொண்டு "நான் போகாது வந்தேனல்லவா?" என மூன்றாவது மனிதன் தம்பதிகளுக்கு முன்னே வந்து நின்றான்.

அந்தத் தம்பதிகள் அன்று எத்தகைய சூழ்ச்சியைக் கையாண்டார்களோ அதையே இன்றைக்கு சீமையில் ஸாமுயேல் ஹோரும் வின்ஸ்டன் சர்ச்சிலும் கையாள்கிறார்கள். ஹோர் ஏதோ தவறு செய்து விட்டாரென்று குற்றம் சாட்டி சர்ச்சில் ஒரு தீர்மானம் கொண்டுவருகின்றான். ஹோர் தான் ஏதோ இந்தியாவிடத்தில் அபார பக்தி கொண்டவரைப் போல நடித்துப் பேசுகின்றார். வெள்ளைக் கடுதாசித் திட்டத்தை எப்படியாவது இந்தியா தலையில் சுமத்திவிட வேண்டுமென்பதற்காக யோக்கியர் போல நடிக்கின்றார். பிரிட்டிஷ்-இந்திய-பருத்தி வர்த்தக ஒப்பந்தத்தைத் தொலைக்க வேண்டுமென்பது சர்ச்சிலின் நோக்கம். ஆகவே அவர் ஹோரைத் தாக்குவது போலப் பேசுகின்றார். எல்லாரும் இந்தியாவின் கண்ணில் மண்ணைத் தூவுகிறார்கள்.

5 பேர் 50 பேராகிறது

"இம்பீரியில் பாங்கிகளில் சிக்கனத்துக்காக ஐரோப்பிய ஆபீசர்களில் 50 பேரை வேலையை விட்டுத் தள்ளப் போகிறார்களாமே!" என்று கல்கத்தா ஸ்டேட்ஸ்மன் என்ற ஆங்கிலோ இந்தியப் பத்திரிகை கண்ணீர் வடித்தது. ஆனால் உண்மையில் ஐந்தே ஐந்து ஐரோப்பியர்கள்தான் சீட்டு தீரப்படுவார்களென்று அஸோஸியேடட் பிரஸ் தெரிவிக்கிறது. அநுதாபம் சம்பாதிப்பதற்காக ஐந்தை ஐம்பதாகத் திரித்துக் கூறும் ஸ்டேட்ஸ்மன் பத்திரிகையின் விஷமத்தை என்னென்பது?

'ஸ்வராஜ்ய' யாகம்

மகாத்மா அமார் சிங் என்ற மீரத் நகரவாசி சென்ற 11 வருஷங்களாக வருஷந்தோறும் ஒரு யாகம் செய்து வருகின்றார். ஸ்வராஜ்ய சித்திக்காக அந்த யாகங்கள் செய்யப்படுகின்றனவாம். ஹஸ்தினாபுரத்தில் இந்த வருடம் ஒரு மாத காலம் இந்த யாகம் நடந்தது. யாகத்தில் நெய்யும், பழமுமே ஆஹுதிக்கு உபயோகிக்கப்பட்டன.

அஸ்ஸாம் கடிதம்

கௌஹாதி என்றால் அஸ்ஸாமி பாஷையில் 'பாக்கு மரம் வளர்ந்த நாடு' என்பது பொருள். அந்த அழகான பெயருக்கேற்ப இயற்கை வளம் மலிந்த அஸ்ஸாம் நாட்டில் மகாத்மாஜி ஹரிஜனப் பிரசாரத்துக்காக சுற்றுப் பிரயாணம் செய்தார். அவரது கோஷ்டியில் உள்ள நண்பர் எழுதியுள்ள கடிதத்தின் சாராம்சம் பின்வருமாறு :—

ஸ்ரீலஸ்ரீ சங்கரதேவர்

"பார்பேடா என்ற ஊரை நாங்கள் அடைந்தோம். அந்த ஊரில் சத்திரங்களும் வைஷ்ணவ மடங்களும் அதிகம். அந்த மடங்களை ஆதி காலத்தில் நிருமித்தவர் ஸ்ரீ சங்கரதேவரின் சீடரான மாதவதேவர் என்பவர். 15-வது நூற்றாண்டின் பிற்பகுதியில் அஸ்ஸாமில் சங்கரதேவர் என்ற சந்யாசி வாழ்ந்து கொண்டிருந்தார். சிறு வயதில் சங்கரர் தன்னோடொத்த வயதினரைப் படிப்பிலும், விளையாட்டுகளிலும் வெல்லும் சக்தியுடையவரா யிருந்தார். பிற்காலத்தில் படிப்பின் காரணமாக பண்டிதரானார். நீந்துவதில் அதி சாமர்த்திய சாலி. அநேகந் தடவை இந்த சந்யாசி பிரும்மபுத்திரா நதியைக் குறுக்கே நீந்தியதுண்டு. இந்தப் பெரியார் கீதையையும் பாகவதத்தையும் அஸ்திவாரமாகக் கொண்டு வைஷ்ணவ மார்க்கத்தை அஸ்ஸாமில் பிரசாரம் செய்து வந்தார். மிருக பலியை நிறுத்தினார். பிரார்த்தனை மூலமே கடவுளை அடைய முடியுமென்று பிரசாரம் செய்தார். பாகவதத்தை அஸ்ஸாமி பாஷையில் பாடித் தந்தார். அவருக்குப் பிறகு அவரது சீடர்கள் அவரது வைஷ்ணவ சமயத்தை அஸ்ஸாம் முழுதும் பரப்பினார்கள்.

ஜாதி, மத வித்தியாசமின்றி அனைவரையும் தனது மார்க்கத்தில் சேர்த்துக்கொண்ட பெருமை சங்கரதேவருக்கு உரியது. ஆனால் அவர் காலத்துக்குப் பின்பு அவரது சிஷ்யகோடிகளுள் அநேக தினுசு ஜாதிகளை சிருஷ்டித்தது மன்னியில் சிலரை கோயில்களுக்குள் அடிக்கடி நுழையலாகாதென ஓர் வழக்கத்தையும் உண்டாக்கி விட்டார்கள். 'கைவார்த்தா' என்ற வைஷ்ணவ வகுப்பினரில்

யாராவது ஒரு இளைஞன் கோயிலுக்குள் புகுந்தால் அவன் 300 ரூபா அபராதம் விதிக்கப்படுவது வழக்கமா யிருந்து வருகிறதாம். இதையெல்லாம் மகாத்மாஜி கண்டித்தார்.

மகாத்மாஜி கௌஹாதி சென்றதும் அங்கு ஸ்ரீயுத புக்கன் அவர்கள் சிரத்தை காட்டிவரும் 'குஷ்டரோகிகள் விடுதி' யொன்றை அடைந்தார். குஷ்டரோக விடுதிகளை இங்கு முனிசிபாலிட்டி நிர்வகித்து வருவது இந்தியாவிலுள்ள இதர முனிஸிபாலிட்டிகளுக்கு உதாரணமாகும்.

அது என்ன காரணமோ தெரியவில்லை. அஸ்ஸாமில் என்ன காரணத்தாலோ குஷ்டரோகம் வெகு கடுமையாக இருந்துவருகிறது. வைத்திய சாஸ்திரத்தால் இதற்குத் தக்க காரணத்தைக் கண்டு பிடிக்க முடியவில்லை. மாகாணத்தின் தலை ஜில்லாவான காமரூப ஜில்லாவில்தான் குஷ்டரோகிகளின் தொகை அதிகமிருந்து வருவது வருந்தத் தக்கது. இந்தியாவிலேயே இங்குதான் அதிக அளவில் குஷ்டரோகிகளும் இதர வியாதியஸ்தர்களும் இருக்கின்றனர்.

(பதினாயிரத்துக்கு இத்தனை பேர் என்று அடியிற் சண்ட கணக்கு காட்டுகிறது.)

	கோல்பதா ஜில்லா	காமரூப ஜில்லா	அஸ்ஸாம்	இந்தியா
பைத்தியம்	8	4	5	3
ஊமை	11	5	9	6
குருடு	13	12	10	12
குஷ்டரோகிகள்	21	14	13	5

இந்தப் பரிதாப நிலைமையை ஆங்காங்கு போக்குவதற்காக அஸ்ஸாமிலுள்ள முனிஸிபாலிட்டிகள் குஷ்டரோக விடுதிகளைக் கட்டித் தருகின்றன.

மகாத்மாஜியின் இந்த யாத்திரையில் அவரைத் தரிசிக்க அநேக குஷ்டரோகிகள் வந்தார்கள். தங்களுடைய கைகளை மகாத்மாவின் பாதத்தின் மேல் வைத்துக் கும்பிட்டார்கள். அவ்வாறு இதரர்கள் செய்வதற்கு இணங்காத மகாத்மாஜி இந்தக் குஷ்டரோகிகள் தொடுவதற்கு மட்டும் சம்பூர்ணமாகச் சும்மா யிருந்தார். தன்னைத் தொடக்கூடாதென்று தடுப்பதாக எங்கே அந்த ஏழை நோயாளிகள் நினைத்துக் கொள்வார்களோ என்பதே மகாத்மாஜியின் எண்ணம்.

மகாத்மாஜி ஹரிஜனச் சேரிகளுக்கு விஜயம் செய்தபோது அங்கு ஒரு ஏழை ஹரிஜன ஸ்திரி மகாத்மாஜியின் பாதங்களில் விழுந்து ஒரு ரூபா பாத காணிக்கை வைத்தாள். அவளுடைய அந்த ரூபாயை யெடுத்துக் காட்டி ஹரிஜனநிதி எவ்வளவு புனிதமானது என்பதற்கு அந்த ரூபா யொரு அறிகுறி யென்றும் ஹரிஜன நிதியை விநியோகிப்பதில் ஊழியர்கள் மிகமிகக் கவனித்து செலவழிக்க வேண்டுமென்றும் மகாத்மாஜி குறிப்பிட்டார்.

அஸ்ஸாமில் பிரஸித்த பெற்ற காமாக் கோயிலைப் போன்று அநேக கோயில்கள் ஹரிஜனங்களை அனுமதிக்க இணங்கிவிட்டன. ஆனால் இன்னும் எவ்வளவோ இடங்களில் ஹரிஜனங்களுக்கிருக்கும் கஷ்டங்கள் தீர்ந்தபாடில்லை. அவைகளைப் போக்குவதற்கான பிரசங்கங்களைப் பல விடங்களில் மகாத்மாஜி செய்தார்.

யாருடைய அபிப்பிராயத்தை ?

(மகாத்மா காந்தி)

தீண்டாமை விலக்கு மசோதாவிற்காக காசியில் ஒரு மாஜிஸ்திரேட் அபிப்பிராயம் திரட்டி வருகிறாராம். அவர் ஹிந்துக்களல்லாதவர்களிடமும், ஆர்யசமாஜிகளிடமும், சீக்கியர்களிடமும், கோயில் விக்ரகாராதனை முதலியவர்களில் நம்பிக்கை யற்றவர்களிடமும் அபிப்பிராயம் வாங்குவதாக ஓர் ஸனாதன பண்டிதர் என்னிடம் புகார் செய்திருக்கின்றார்.

மேற்படி மசோதாக்களுக்கு ஹிந்துக்களல்லாதவர்களிடம் அபிப்பிராயம் சேகரிக்கலாகாதென்றும் —னும் ஹிந்து ஹரிஜனங்களிடம் கூட அபிப்பிராயம் வாங்கக் கூடாதென்றும் பல தடவை நான் எழுதி யிருக்கின்றேன். 'தீண்டாமை' என்ற விஷயம் மேல் ஜாதி ஹிந்துக்களுடையது; ஆகவே அவர்களுடைய அபிப்பிராயம் தான் மேற்படி மசோதாக்களுக்கு உபயோகமானது.

இதை யறியாது காரியம் செய்தால் ஹிந்துக்களல்லாதவர்களின் அபிப்பிராயங்களைக்கொண்டு ஹிந்துக்களை ஏதோ பலாத்காரம் செய்வதாகவே இது முடியும். மேல் ஜாதி ஹிந்துக்களிடையேயுள்ள ஓர் அழுக்கைப் போக்கிக் கொள்வதே தீண்டாமை விலக்கு இயக்கமாகும். அது ஒரு பிராயச்சித்த இயக்கம். வெளியே யிருந்து அதற்கு எதுவும் தேவையில்லை. எனக்குத் தெரிவித்த இந்த ஸனாதன பண்டிதர் சொல்வது உண்மையான செய்தியானால் சர்க்கார் என் வார்த்தைக்கு மதிப்பு வைக்குமானால் உடனே தங்கள் உத்யோகஸ்தர்களுக்கு உத்தரவுகள் போட்டு ஹிந்துக்களல்லாதவர்களின் அபிப்பிராயங்களைச் சேகரிக்காதிருக்க வேண்டுமென்று சர்க்காரைக் கேட்டுக் கொள்வேன்.

ஹிந்துக்களல்லாதவர்களின் உதவியைக் கொண்டே இந்த மசோதாக்கள் நிறைவேறி விடுமென நான் எண்ணவில்லை. இந்த விஷயத்தில் ஸனாதனிகள் அபிப்பிராயம் பிரதிநிதித்துவம் வாய்த்ததல்ல என்பது எனது கருத்து. நான் அறிந்த வரையில் ஹரிஜனங்களுக்குக் கோயில்களைத் திறந்துவிடும் விஷயத்தில் மேல்ஜாதி ஹிந்துக்களின் அபிப்பிராயம் ஸாதகமாகவே இருக்கிறதென்று தோன்றுகிறது. இந்த மசோதா சம்பந்தப்பட்டமட்டில் பொது ஜனங்கள் அபிப்பிராயம் தருவதற்கு பொருத்தமில்லை யென்றும் நினைக்கின்றேன். இது சட்ட சம்பந்தமான விஷயம். சட்ட நிபுணர்களே நிர்ணயிக்கவேண்டும்.

ஹரிஜனங்களுக்குக் கோயில்களைத் திறந்துவிடும் விஷயத்தில் பெரும்பாலான ஹிந்துக்களின் அபிப்பிராயம் சாதகமாக இருப்பின் எவ்வளவு மகாமகா பண்டிதர்கள் எதிர்த்தபோதிலும் கோயில்களைத் திறந்து விடவேண்டியதே சரி. அத்தனை ஹிந்துக்களின் அபிப்பிராயத்தை அமுலில் கொண்டுவர சட்டம் இடைஞ்சலா யிருப்பதாக லாயர்கள் சொல்வதால், இந்த இடைஞ்சலை நீக்கவேண்டிய பொறுப்பு சட்ட சபைகளின் தலையில் விழுந்திருக்கிறது. மேல் ஜாதியாரின் அபிப்பிராயத்தை வேறெப்படித்தான் நிறைவேற்றுவது?

இங்கு நான் சொன்ன வழியே ஆலோசித்துப் பார்த்தால் மேற்படி மசோதாக்களை அபிப்பிராயம் அறிவதற்காக சுற்றி வருமாறு செய்ததே தவறு என்று ஏற்படும். ஏனெனில் மசோதாக்கள் ஒத்தாசை பூர்வமானது. ஒரு ஹிந்துக் கோயிலைத் திறந்துவிடும் விஷயத்தில் ஒரு ஜாதி ஹிந்து ஆட்சேபித்தாலும்—யாரும் ஆட்சேபிக்காவிட்டாலும் கூட—கோயில்கள் திறந்து விடப்படக்கூடாது என்று சிலர் கட்சியாடுகிறார்கள். இது சுத்த அபத்தமான கட்சி. ஆனால் இந்த அபிப்பிராயத்தை அநேக ஸனாதன தர்மிகள் சொல்லுவதுதான் வருந்தத்தக்க விஷயம். இந்த விஷயத்தில் துரைத்தனம் முள் முனை மாறாது நீதி வழங்க வேண்டும். இந்தச் சீர்திருத்தத்துக்குள்ள இடைஞ்சல்களைப் போக்க வேண்டும். இதற்கு மேல் எதும் செய்ய மேற்படி மசோதாக்கள் கோரவில்லை. இருக்கின்ற கோயில்களுக்குப் போக யார் யாருக்கு இன்றைக்கு உரிமையுண்டோ அவர்கள் இஷ்டத்தைப் பொறுத்துத் தானிருக்கிறது. கோயில்கள் திறக்கப்படுவதும்.

இது உண்மையாயின் வெட்கக்கேடுதான்!

(மகாத்மா காந்தி)

காசியில் ஒரு மாஜிஸ்திரேட் தீண்டாமை விலக்கு மசோதாவுக்காக ஹிந்துக்களல்லாதவர்களின் அபிப்பிராயத்தைச் சேகரித்தாரென்று புகார் செய்தாரே அதே பண்டிதர் இன்னொரு புகாரையும் செய்திருக்கிறார். சீர்திருத்தக்காரர்கள் பலவந்தமாகச் சில கோயில்களை ஹரிஜனங்களுக்குத் திறந்துவிட்டு விட்டதாக அவர் சொல்கிறார். இது உண்மையாயின் இது வெட்கக்கேடான விஷயம்தான். இந்த இயக்கத்தை ஓர் புனித இயக்கமாகவும் பிராயச்சித்த இயக்கமாகவும் மதத்தில் நம்பிக்கையுடையோர் தொடங்கி யிருக்கி யிருக்கிறோம். ஊரிலுள்ள எல்லாக் கோயில்களும் ஹரிஜனங்களுக்கு திறக்கப்பட்டு விட்டாலும் அதில் பலாத்காரச் செய்கை இருக்குமாயின் அது ஹிந்து மதத்துக்கு நல்லதென்று நான் சொல்லமாட்டேன். அதனால் இயக்கத்தின் லட்சியமாகிய சகோதரத்துவம் கைகூடாது. பலவந்தமாக ஓர் கோயில் திறக்கப்பட்டதானால் அது இந்த இயக்கத்துக்கே கேடு விளைவிப்பதாகும். சுதந்திரம் சுற்றியுள்ள இடத்தில்தான் ஹிருதய மாற்றம் ஏற்படுத்த முடியும்.

வடக்கே பல கோயில்கள் பலவந்தமாகத் திறக்கப்பட்டதென்று புகார் செய்யும் இந்தப் பண்டிதர் குறிப்பிட்டு எந்த உதாரணத்தையும் என்னிடம் காட்டவில்லை. அந்தக் கோயில்கள் யாவை யென நான் விசாரித்துக்கொண்டிருக்கிறேன். இது உண்மையாக இருந்தால் உடனே இந்த விஷமத்தைக் களையவேண்டும். இயக்கத்துக்கு அப்போதுதான் பலம். அந்தக் கோயில்கள் உடனே சாத்தப்படவேண்டுமென்றும் நல்ல நாட்கள் உதயமாகும் வரை ஹரிஜனங்கள் காத்திருந்து தீரவேண்டு மென்றே நான் சொல்வேன். இந்தப் பண்டிதர் மிகைபடக் கூறுபவராக இருந்தபோதினும் நான் இங்கு கூறிய எச்சரிக்கை உபயோகப்படக் கூடியதே!

கதரை அணியுங்கள்

டாக்டர் மாலி

[டாக்டர் மாலி என்பவர் தீண்டாத வகுப்பினர். அவர் அந்த ஜாதியில் பிறந்திருக்காவிடில் இன்னும் எவ்வளவு உயரப்போயிருப்பாரோ? நம் தேசத்தில் நல்லவைகளை நாம் தெரிந்து கொள்ளாம விருந்து வருகிறோம். கோடிக் கணக்கான சகோதரர்களைத் தீண்டாதார் என்று ஒதுக்கி வைத்து விடுவதால் மனித சமூகத்தில் மிகமிகச் சிறந்த சில மனித சக்திகளை நாம் இழந்து விடுகிறோம். இது மதத்தின் பெயரால் நடப்பது கொடுமையினும் கொடுமை. மனித தர்மத்துக்குப் புறம்பானவைகளை மதம் ஆதரிக்குமாயின் மதத்தின் மீதே கோபம் எற்பட்டு விடுகிறது சிலருக்கு. அவர்கள் மதத்தையும், மதத்தைப் பின்பற்றுபவர்களையும் ஒன்றென எண்ண வேண்டாமெனக் கேட்டுக் கொள்ளுகின்றேன். டாக்டர் மாலி என்பவரின் கதை பின்வருமாறு. —எம். கே. காந்தி.]

'மாலி' என்றால் தோட்டக்காரன் என்பது பொருள். இந்த ஜாதி அஸ்ஸாமில் தாழ்த்தப்பட்ட வகுப்புகளில் ஒன்று. சசிபூஷன் இந்த ஜாதியில் பிறந்தவர். இந்த ஜாதியில் பிறந்த பிள்ளைகள் கிராமப் பள்ளிக்கூடத்தைவிட அதிகப் படிப்பு படிப்பது அபூர்வம். சசிபூஷன் கிராமப் படிப்பு முடிந்த பின்பு முன்ஷி பஜார் பெரிய பள்ளிக்கூடத்தைச் சேர்ந்தான். அவனுடைய அபார அறிவைக் கண்டு உபாத்தியாயர்கள் மெச்சினார்கள். ஸ்காலர்ஷிப்புகள் (உபகாரச் சம்பளங்கள்) கிடைத்தன. மெட்ரிகுலேஷன் பரிட்சையில் முதலாவதாகப் பாஸ் செய்தான். பிறகு ஸர்வகலாசாலைப் படிப்பிலும் புகுந்து முதல் கிளாஸ் ஐ. எஸ். ஸி. பட்டம் பெற்றதும் கல்கத்தா ஸர்வகலாசாலையில் படித்து பி. எஸ். ஸி. யிலும் முதலாவதாகத் தேர்ந்தான். பிறகு சசிபூஷண மாலியை ஸில்ஹட் காலேஜில் பிரொபஸராக எடுத்துக்கொண்டார்கள். பிறகு டாக்கா ஸர்வகலாசாலையிலும் ஓர் ஆசிரியராக நியமிக்கப்பட்டார்.

இந்த 5 வருட காலத்தில் அவர் விஞ்ஞான ஆராய்ச்சியைத் தொடர்ந்து விஞ்ஞானக் கூடத்தில் நடத்தி வந்தார். காலையிலிருந்து இராத்திரி 9 மணி வரை ஆராய்ச்சிதான். அவருடைய ஆராய்ச்சிகளையெல்லாம் அறிந்த பிறகு 1926-ம் ௵ கல்கத்தா சர்வகலாசாலை அவருக்கு டாக்டர் பட்டம் அளித்தது. விஞ்ஞான சஞ்சிகைகளிலும், புத்தகங்களிலும் டாக்டர் மாலியின் ஆராய்ச்சிகள் பெரிதும் வெளிவரத் தொடங்கின. F. G. டோனன் என்பார் எழுதிய ரஸாயன நூலில் மாலியின் ஆராய்ச்சிகளைப் பற்றி சொல்லப்பட்டிருக்கிறது.

1927-ம் ௵த்தில் கௌஹாதி காட்டன் கல்லூரியில் ஒரு ப்ரொபஸராக அவர் நியமிக்கப்பட்டார். இரண்டு வருஷம்கூட ஆகவில்லை. அவருடைய வாழ்க்கையில் ஓர் பரிதாபகரமான திருப்பம் நிகழ்ந்தது. அவருக்குப் பித்தம் பிடித்துவிட்டது. உத்யோகம் போய்விட்டது நண்பர்களெல்லாரும் அவருக்கு சிகிச்சை செய்து பார்த்தும் பயனில்லை. அவருடைய 40-வது வயதில் இரண்டு பச்சைக் குழந்தைகளைப் பரிதவிக்க விட்டுவிட்டு அந்த அறிஞர் காலமடைந்துவிட்டார். அவரை அறிந்தவர்களெல்லாரும் அவருடைய உழைப்பைப் பற்றியும், நற்குணங்களைப் பற்றியும் புகழ் பாடுகின்றனர். வறுமையிலிருந்தாலும் தாழ்ந்த ஜாதியில் பிறந்தாலும் உழைப்பால் முன்னுக்கு வரலாமென்பதற்கு டாக்டர் மாலியின் சரிதையே சிறந்த உதாரணம். இப்பேர்ப்பட்ட பெரியாருக்கு என் பித்தம் பிடித்தது? காரணத்தை என்னென்பது? அவருடைய அதிகமாக ஆராய்ச்சி மூளையைத் தாக்கியிருக்குமா—என்னென்று கூறுவது. அது விவரிக்கமுடியாத இரகஸ்யமன்றோ! ஹரிஜன்.

நந்தனார் கீர்த்தனைச் சுருக்கம்

(தொகுத்தவர்: சக்கரவர்த்தி இராஜகோபாலாச்சாரியார்)

விலை அணா 2.

கோபாலகிருஷ்ண பாரதியாரின் நந்தனார் சரித்திரக் கீர்த்தனைகளில் முக்கியமான பலவற்றையும் ராஜாஜீ பொறுக்கித் தொகுத்திருக்கிறார். மாஜி ஹைகோர்ட் ஜட்ஜி வி. பாஷ்யம் அய்யங்காரின் நேர்த்தியான முகவுரையுடன் கூடியது. சுத்தமான பதிப்பு. டெம்மி 1×8 அளவில் 50 பக்கங்கள்.

சுதந்திரச்சங்கு புத்தகசாலை,

திருவல்லிக்கேணி, சென்னை.

வரப்பெற்றோம்

"பகுத்தறிவு" காலணா தினசரி

ஈரோட்டினின்று வெளிவருவது.

திரு. ஈ. வி. கிருஷ்ணஸ்வாமி அவர்களை ஆசிரியராகக் கொண்டு சுயமரியாதைப் பிரசார நிமித்தம் வெளியிடப்படும் பத்திரிகை. வழக்கமாக 'சுயமரியாதை'க்காரர்கள் எழுதும் தோரணையில் கட்டுரைகள் இருக்கின்றன. ஜாதிப் பிணக்கைத் தேசத்தினின்று ஒழிப்பது பத்திரிகையின் நோக்கமென்று தெரிகிறது. அதற்கான கட்டுரைகளை இன்னும் கொஞ்சம் உயரியதான முறையில் எழுதினால் அதிகப் பயன் உண்டென்று சொல்லலாமன்றோ.

"தேச ஊழியன்" வாரப் பத்திரிகை

புதுக்கோட்டையினின்று வெளிவருவது.

புதிய உருவத்தில் வெளிவந்துள்ள இப் பத்திரிகைக்கு பத்தாவதாண்டு பிறந்திருக்கிறது. இதன் ஆசிரியர் ஆ. சு. நாகரத்தினம். அவர் சமஸ்தானப் பிரஜைகளுக்கு ஊழியம் செய்து தேசப்ரஷ்டம் செய்யப்பட்டவரென்று தெரிவதால் அவருக்குள்ள சேவைப்புத்தியைப்பற்றி அதிகம் வர்ணிக்கத் தேவையில்லை. நல்ல விஷயங்களை தன்னுட்கொண்டுள்ள இப்பத்திரிகையின் அச்சும், பதிப்பும் இன்னும் கொஞ்சம் உயர்ந்த ரகத்தில் இருக்கவேண்டுமென ஒரு வார்த்தை சொல்லலாமல்லவா?

"இரங்கற்பாக்கள்"

திருநெல்வேலி ஸ்ரீ சபாபதிக் குருக்கள் தமது அத்தியந்த நண்பரான ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாத பண்டிதர் மீது பாடிய இரங்கற்பாக்களடங்கியது இந்நூல். ஒரு பண்டிதன் இன்னொரு பண்டிதனுடைய மறைவுக்காக மனம் வருந்திப் பாடும் பாடல்கள்!

தமிழர் மகாநாடு அறிக்கைகள்

திருநெல்வேலியில் மேமாதம் 18, 19, 20 தேதிகளில் நடைபெறப்போகும் தமிழர் மகாநாடு சம்பந்தமாக வெளியிடப்பட்டுள்ள இரு அறிக்கைகள் கிடைக்கப்பெற்றோம். தமிழ்ப் பெரியார் பலர் இம்மகாநாட்டின் விளைவுக்காகப் பாடு படுகிறார்களென்பது தெரிகிறது. இவர்களால் தோன்றுவதாக இருக்கும் சென்னை மாகாணத் தமிழ்ச் சங்கம் பரந்த நோக்கத்தோடு ஊழியம் செய்யப் போகின்றதா என்பதை அறிய ஆவலுடையவரா யிருக்கிறோம். —"ஆயில்யம்."

சத்திய சோதனை

முதல் பாகம் ரூ. 1-8.
இரண்டாம் பாகம் ரூ. 2.

மகாத்மா காந்தி

தம் சுயசரித்தை இதில் சொல்லியிருக்கிறார்.

சுதந்திரச் சங்கு காரியாலயம், 8-c, பைகிராப்ட்ஸ் ரோட், திருவல்லிக்கேணி, சென்னை.

"Swathanthara Sangu"

A high class popular Tamil weekly.

Price one anna a copy.

Annual subscription :

Inland Rs. 4. **Foreign Rs. 6.**

ADVERTISEMENT TARIFF

	Per Insertion.
Advertisement rates per Page	Rs. 40 0 0
" Half Page	Rs. 20 0 0
" Quarter Page	Rs. 10 0 0
" per column inch	Rs. 1 8 0

One page is divided into 3 columns of 2¼" × 9"

Cover Pages

2nd & 3rd cover page Rs. 50.
4th cover page Rs. 75.

For contracts of 3 months, 6 months and One year a discount of 5, 10 & 15% respectively will be given over these rates.

Office : 8-c, Pycrofts Road,
TRIPLICANE, MADRAS.

"சுதந்திரச் சங்கு"

ஒரு உயர்தரத் தமிழ் வாரப் பத்திரிகை.

தனிப் பிரதி விலை அணா 1.

வருடச் சந்தா :

உள்நாடு ரூ. 4. வெளிநாடு ரூ. 6.

விளம்பர விகிதங்கள்

ஒரு பக்கத்திற்கு தடவை ஒன்றுக்கு			ரூ. 40 0 0
அரைப் பக்கத்திற்கு	,,	,,	ரூ. 20 0 0
கால் பக்கத்திற்கு	,,	,,	ரூ. 10 0 0
ஒரு பத்தி ஒரு அங்குலத்துக்கு	,,	,,	ரூ. 1 8 0

ஒரு பக்கம் 2¼" x 9" அளவுக்கு 3-பத்திகளாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது.

அட்டைப் பக்கங்கள்

2-வது, 3-வது பக்கங்களுக்கு ஒரு தடவைக்கு ரூ. 50.
4-வது பக்கத்துக்கு ஒரு தடவைக்கு ரூ. 75.

3-மாதம், 6-மாதம், ஒரு வருஷம் ஒப்பந்தங்களுக்கு, இந்த விகிதங்களிலிருந்து முறையே நூற்றுக்கு 5, 10, 15 வீதம் 'டிஸ்கவுண்ட்' தள்ளிக் கொடுக்கப்படும்.

மானேஜர்,
"சுதந்திரச் சங்கு",
8-c, பைக்ராப்ட்ஸ் ரோடு,
திருவல்லிக்கேணி, சென்னை.



ஹிஸ் மாஸ்டர்ஸ் வாய்ஸ்

கிராமபோன் கம்பெனி, லிமிடெட்.

ஹௌத் பரேட், பெங்களூர்.

Edited, Printed and Published by S. Subramanian at the Swathanthara Sangu Press, Triplicane, Madras.